★ விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 தை 21 ரபி. ஆகி 19 இதழ் 356

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 3—2—83

# இரவு 7 மணிவரை மட்டுமே பஸ்சேவை

## பொலிஸ் - ராணுவ கூட்டு ரோந்து பலப்படுத்தப்பட்டது

[யாழ்ப்பாணம்]

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் சகல பஸ்சேவைகளும். நேற்று இரவு ஏழு மணியுடன் நிறுத்தப்பட்டன.

இரவு பஸ் சேவை தொடர்ந்து இன்றும் நாளையும் இரவு ஏழு மணியுடன் நிறுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வ. பி. போ. சபை உயர் அதிகாரி ஒருவர் நேற்றிரவு ''ஈழநாடு''விடம் தெரிவிக்கையில், பாதுகாப்புக் காரணங்கள் குறித்தே இரவு பஸ் சேவை ஏழு மணியுடன் நிறுத்தப்பட்டதாகத் தெரிவித்தார்.

அதே நேரத்தில் இரவு யாழ். ரயில்—பஸ் இணைப்புச் சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

சுதந்திரதினத்தை யொட்டி வடபகுதியில் பொலிஸ்-இராணுவ ரோந்து நடவடிக்கை பலப்படுத்தப்பட்டுள்ளது.

சுதந்திர தினத்தைப் பகிஷ்கரிக்குமாறு கோரி சுவரொட்டிகள் ஒட்டுவோர், கறுப்புக் கொடி ஏற்றுபவர்கள் மீது கண்காணிப்பாக இருக்கும் பொருட்டே ஆயுதப் படையினரின் ரோந்து நடவடிக்கை பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## ராஜீவ் காந்தி நியமனம்

புதுடில்லி, பெப். 2

பாரதப் பிரதமர் இந்திரா காந்தியின் சிரேஷ்ட புதல்வர் திரு. ரஜீவ் காந்தி (38 வயது)

[8-ம் பக்கம் பார்க்க]

# அமைச்சரவையில் அடுத்த வாரம் மாற்றம்!

(கொழும்பு)

அமைச்சரவையில் மாற்றம் ஏற்படுமா? அடுத்த வாரம் இது நிகழலாம் என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

சுதந்திரதின வைபவங்களைத் தொடர்ந்து எந்த நேரத்திலும் அமைச்சரவை மாற்றம் நிகழலாம் என்று அபிப்பிராயம் வெளியிடும் அரசியல் அவதானிகள் குறிப்பாக ஐந்து புதிய முகங்கள் அமைச்சர்களாகச் சத்தியப்பிரமாணம் எடுக்கலாம் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட புதியமுகங்களில் திரு. பி. பி. ஜி. கலுகல்லை, டாக்டர் விக்கிரமசூரிய, திரு. ரஞ்சன் விஜயரத்ன ஆகிய மூவரும் குறிப்பிடத்தக்கவர்கள் என்று ஹேஸ்யம் வெளியிடப்படுகிறது.

இதே நேரத்தில், பல அரச கூட்டுத்தாபனங்களிலும் தலைவர்கள் மாற்றப்படலாம் எனத் தெரியவருகிறது.

## பரு. சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம்

[புலோலி]

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. ரி. கே. திலகன், இராணுவத்தினரால் அவமதிப்புக்குள்ளானது குறித்து பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கம் கண்டனத் தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது. இது சம்பந்தமாக இராணுவத்தினர் மீது நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவையும் இச்சங்கம் கோரியுள்ளது.

பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் திரு. நாகலிங்கமுதலி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சட்டத்தரணி திரு. கே. ஜெயக்கொடி இச்சம்பவம் குறித்து வன்மையாகக் கண்டித்துப் பேசியதுடன், கண்டனத் தீர்மானத்தை முன்மொழிந்தார். இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இக்கண்டனத் தீர்மானத்தின் பிரதிகள் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், பிரதம நீதியரசர், நீதிமந்திரி ஆகியோருக்கும் அனுப்பி வைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது

## 20சத கொள்ளை ரூ1000 அபராதம்

[மன்னார்]

சீனி விற்பனையில் கொள்ளை லாபம் பெற்ற வர்த்தகர் ஒருவர் ஆயிரம் ரூபாவை அபராதமாகச் செலுத்தினார்.

பேசாலையைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் 500 கிறாம் சீனி விற்பனையில் 20சதம் கொள்ளை லாபம் பெற்றாரென மன்னார் விலைக் கட்டுப்பாட்டதிகாரி ஜனாப் எம். ஏ. சி. எம். ஜசீன் மன்னார் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்திருந்தார்.

இவ்வழக்கை விசாரணை செய்த மன்னார் நீதவான் கொள்ளைலாபம் பெற்ற வர்த்தகருக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

# யாழ். பல்கலைக்கழக மாணவர் 3-வதுநாளாக உண்ணாவிரதம்

## மயக்க நிலையில் மாணவர், மாணவியர்!

(யாழ்ப்பாணம்)

உண்ணாவிரதம் இருந்து வரும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு நேற்று இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய குருமார்கள் நேரில் சென்று ஆசிகூறினார்கள்.

உண்ணாவிரதம் இன்று மூன்றாவது நாளாக யாழ். பல்கலைக்கழக வளவுக்குள் நடைபெற்று வருகிறது.

தடுத்துவைக்கப்பட்டிருக்கும் மாணவர்களான ராஜாஜியின் இரு சகோதரிகளும், ஜெயப்பிரகாஷின் தாய், தந்தையும் நேற்றுப்பகல் முழுவதும் உண்ணாவிரதத்தில் பங்குகொண்டிருந்தனர்.

### மயங்கி விழுந்தார்

நேற்றுக்காலை உண்ணாவிரதம் இருந்த கலைப்பீட மாணவர் பத்திநாதர் மயங்கி விழுந்தார். இவர் உடனடியாக யாழ். பல்கலைக்கழக மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டுச் சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் ஒரு மணித்தியாலம் கழித்து மீண்டும் உண்ணாவிரதத்தில்கலந்து கொண்டார்.

### 2 மாணவிகளுக்கு வாந்தி

உண்ணாவிரதத்தில் இருந்த மாணவிகள் வாந்தி எடுத்ததைத் தொடர்ந்து அவர்களுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டது. மீண்டும் அவர்கள் உண்ணாவிரதத்தில் பங்குபற்றினர்.

கடந்த முதலாம் திகதி தொடக்கம் உண்ணாவிரதத்தில் இருக்கும் 50 மாணவர்களும் நான்காவது நாளான நாளை வெள்ளிக்கிழமை உண்ணாவிரதத்தை முடித்துவைப்பர்.

[8-ம் பக்கம் பார்க்க]

## 2 இளைஞர்கள் கைது!

(யாழ்ப்பாணம்)

''பெப்ரவரி 4ம் திகதி சுதந்திர தின வைபவங்களைப் பகிஷ்கரியுங்கள்'' என்ற வாசகங்கள்கொண்ட சுவரொட்டிகளை வைத்திருந்த இரு இளைஞர்களைப் பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

கோண்டாவிலைச் சேர்ந்த தவராசா, ஸ்ரீநிவாசன் ஆகியோரே கைதுசெய்யப்பட்டவர்களாவர். இவ்விரு இளைஞர்களும் ஈழ மாணவர் பொதுமன்ற உறுப்பினர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இருவரும் யாழ். இரசியப் பொலிசாரிடம் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (மா)

## ஹர்த்தால் அனுஷ்டிக்க விடுதலை அணி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரிலுள்ள வர்த்தக நிலையங்களை 3ம், 4ம் திகதிகளில் பூட்டி, பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு தமிழீழ விடுதலை அணியினர் வர்த்தக நிலையங்களுக்கு நேரில் சென்று வேண்டுகோள் விடுத்தனர்.

தமிழீழ விடுதலை அணித் தலைவர் டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம், நிர்வாகச் செயலாளர் ஈழவேந்தன், பிரசாரச்செயலாளர் கோவை மகேசன் ஆகியோரர் நேற்று ஒவ்வொரு வர்த்தக நிலையங்களுக்கும் சென்று வேண்டுகோள் விடுத்தனர்.

வர்த்தகர்கள் இரு தினங்களும் கடைகளைப் பூட்டி பூரண ஒத்துழைப்பு வழங்கச் சம்மதம் தெரிவித்திருப்பதாக

8ம் பக்கம் பார்க்க)

## திருமண அழைப்பு

**சொ. யோகநாதன்** வாலிபர் விவசாயத்திட்டம் கிளைமடு.

**மு. புஷ்பமலர்** (Dip-in-Music)

4-2-83 காலை நடைபெறவுள்ள திருமணத்தையொட்டிய வரவேற்புபசாரம் 4-2-83 மாலை 4-00—6-00மணிவரை மணமகன் இல்லத்தில் (துர்க்கை அம்மன் கோவிலடி, தெல்லிப்பழை) நடைபெறும். இவ்வைபவத்துக்கு உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. செ. சொக்கநாதன் குடும்பத்தினர்
பாலன் வளவு,
தெல்லிப்பழை.

திரு. ஆ. பத்மநாதன் குடும்பத்தினர்
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

6050

## 30 கைதிகள் நாளை விடுதலை

[யாழ்ப்பாணம்]

சுதந்திர தினத்தையொட்டி யாழ்ப்பாணம், கோப்பாய் சிறைச்சாலைகளிலிருந்து 30 சிறைக் கைதிகள் நாளை விடுதலை செய்யப்படவுள்ளனர்.

விடுதலை செய்யப்படவிருக்கும் இந்த 30 கைதிகளும் சிறு குற்றச் சம்பவங்களில் ஈடுபட்டு, 6 மாத சிறைத் தண்டனைகளுக்குட்பட்டவர்களாவர்.

யாழ்ப்பாணச் சிறையிலிருந்து 18 பேரும், கோப்பாய் சிறையிலிருந்து 12 பேரும் நாளை விடுதலைசெய்யப்படுவர். [மா]

## சர்வோதய சீட்டிழுப்பு முடிவுகள்

வடமாகாண சர்வோதய இயக்கத்தினரால் 01-02-83 அன்று மாலை 7 மணிக்கு கட்டுவன் ஊரங்குணைக் கிராமத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 8வது சீட்டிழுப்பின் பின்வரும் இலக்கங்கள் பரிசுக்குரியவை எனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன:

1ம் பரிசு: 17775
(தொலைக்காட்சிப் பெட்டி)

2ம் பரிசு 06581
(நீர் இறைக்கும் யந்திரம்)

3ம் பரிசு 08877
(கிருமிநாசினி தெளிக்கும் கருவி)

ரூபா 250/- பெறுமதிகொண்ட ஏழு ஆறுதல் பரிசுகள்:-

15266, 08873, 09845, 15163
12254, 17914, 10450.

மூன்று மாதங்களுக்கிடையில் பரிசுகள் கோரப்படாவிடில் பரிசுச் சீட்டு செல்லுபடியற்றதாகும்.

(6074)

# வரி விளம்பரம்

## வாடகைக்கு

உடுவில், இராமநாதன் ரோட்டில் ஒரு அறையும், குசினியும் வாடகைக்குண்டு. மாணவிகளுக்கு முதலிடம் வழங்கப்படும். உடனடியாக 4ம் திகதி அல்லது 6ம் திகதி தொடர்பு கொள்ளவும். க. குகமோகன் மே/பா S. K. பரம், இராமநாதன் ரோட், உடுவில் கிழக்கு, சுன்னாகம்.
6072

## விற்பனைக்கு

யாழ். பிறவுண் வீதியில் தொழில் நுட்பக்கல்லூரிக்கு அண்மையில் 3 பரப்பு காணி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: திருச்செல்வம், 91, சம்பியன் லேன், கொக்குவில்.
6075

## தேவை

தமிழ் தட்டெழுத்து/எழுதுவினைஞர் உடன் தேவை. திறமையும், அனுபவமும், ஆங்கில அறிவும் உடையவர் விரும்பத்தக்கது. ஆங்கில தட்டெழுத்துப் பயிற்சியும் பெற்றவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். இம்மாதம் 4, 5, 6ம் திகதிகளில் நேரில் தொடர்பு கொள்ளவும்-இல:257, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(6060)

நல்ல நிலையில் உள்ள சிலிண்டர் மெசினும் பிளேட்டன் மெசினும் உடனடியாகத் தேவை. தொடர்பு க. அம்பமுகன், விபுலானந்த அச்சகம் 248/5, கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம். 6068

நோயாளரைப் பராமரித்தல், தையல் ஆகியவற்றில் ஆர்வம் உள்ளவர்கள் தேவை விபரங்கட்கு; அன்ரனூஸ், 52 பத்திமாகிரி, பண்டத்தரிப்பு
6028

## வகுப்புகள்

Scientific Cutting, Hair Styles, Cake Making and Icing, Short Eats, Flower Making ஆகியவற்றிற்கு வகுப்புக்கள் நடைபெறுகின்றன சேர விரும்புவோர் சனி, ஞாயிறு நாட்களில் தொடர்பு கொள்ளவும். இல 27, 3ம் ஒழுங்கை (எஸ். பி. சாமி அன் கோ அருகாமையில்) மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
6025

## பயிற்சி

ரேடியோ - டெலிவிஷன், ஏயர் கொண்டிசனிங், எலக்றிக்கல் வயறிங், எலக்றிக்கல் றீவைண்டிங், மோட்டர்மெக்கானிசம், வெல்டிங் பயிற்சிகள் ஆரம்பம் 09-02-83 விபரம் நேரில் (The School of Computer Studies) 52/1, கனகரத்தினம் கட்டிடம் (வீனஸ் மேல்மாடி) விராவில் வீதி, யாழ்ப்பாணம். 6035

வெல்டிங்- மோட்டார் மெகானிசம் - வயறிங் [அதிக செய்முறை அறிமுறையுடன் ஆரம்பம்: 4-2-83. 9-00am The Jaffna Engineering College, J E C, 33, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் [புகையிரதக் கடவைக்கருகில்]
6054

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## வெற்றுச் சாக்கு கேள்விப்பத்திரம்

இடம்:- நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.
வெற்றுச்சாக்குத் தொகை:- 2350
விண்ணப்பப் படிவம்:- ரூபா 4.00
மீளளிப்புபணம்:- ரூபா 300/-
முடிவு திகதி:- 10/2/83 நண்பகல் 12-00 மணி.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வெற்றுச் சாக்கு" எனக்குறிப்பிட்டு தலைவர், நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம், நெடுந்தீவு. என்ற விலாசத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

இரா. தர்மலிங்கம்
பொது முகாமையாளர்

நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்,
நெடுந்தீவு. 6067

## வட இலங்கைச் சங்கீத சபை பரீட்சைகள் - 1983

# பிரதான அறிவித்தல்

மேற்படி பரீட்சைகள் தொடர்பாக பின்வரும் முடிவுகள் செய்யப்பட்டுள்ளன.

1.
(I) 1982ம் ஆண்டு ஐந்தாம், ஆறும் பகுதிகளுக்குத்தோற்றிச் சித்தியடையாதோர் நூன சித்தி பெற்றவர்களைப் போன்று தொடர்ந்து இருதடவைகள் பரீட்சைக்குத் தோற்றலாம்.

(ii) ஐந்தாம் பகுதிக்குத் தோற்றுபவர்களுக்கு க. பொ. த. (சாதாரண பரீட்சையில் தமிழ் பாடத்தில் திறமைச்சித்தி Credit-Pass) தேவையென்பது தளர்த்தப்பட்டுள்ளது. இப்பாடத்தில் சாதாரணசித்திபோதும்.

(iii) ஐந்தாம் பகுதிக்குத் தோற்றுபவர்கள் க. பொ. த [சாதாரண] பரீட்சையில் எண்கணிதம்/கணிதம்/வர்த்தககணிதம் பாடத்தில் கட்டாயம் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

(iv) ஐந்தாம் பகுதிக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் ஏனையநிபந்தனைகளுடன் 1982ம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் நடைபெற்ற க. பொ. த. (சாதாரண) பரீட்சை முடிவைப் பொறுத்து (Pending Results) விண்ணப்பிக்கலாம்.

[v] குறிக்கப்பட்ட கல்வித் தகைமைகள் இல்லாதவர்கள் பரீட்சைகளுக்குத் தோற்றமுடியாது.

2. எனவே மேற்படி நிபந்தனைகளுக்கமையப் பரீட்சைக்குத் தோற்றத்தகுதியுடையோர் ஏற்கனவே விண்ணப்பித்திருக்காவிடின் எதிர்வரும் 21-02-1983 வரை விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

3. இவ்வறிவித்தல் ஐந்தாம், ஆறும் பகுதிப பரீட்சார்த்திகளுக்கு மட்டும் பொருத்தமானது.

ம. சிமியாம்பிள்ளை
கல்விப்பணிப்பாளரும்
வ. இ. ச. சபைத்தலைவரும்

வ. இ. ச சபை அலுவலகம்
கல்வித்திணைக்களம்
யாழ்ப்பாணம. 31-1-1983.
(6066)

## பரு. பெற்றோல் நிலைய கொள்ளை:

# 9 சந்தேக நபர்களுக்கும் தொடர்ந்து றிமாண்ட்

(புலோலி)

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பெற்றோல் நிலையக் கொள்ளைச்சம்பவம் தொடர்பான 9 சந்தேக நபர்களையும் தொடர்ந்தும் இம் மாதம் 14-ம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் திரு. வி. பி. சுந்தரலிங்கம் உத்தரவிட்டார்,

இப்பெற்றோல் நிலையக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ரீ. றாஞ்சன், வி. செல்வரத்தினம், எஸ். இரத்தினம் எஸ். சந்திரசேகரம், பீ. சீவரத்தினம், ஆர். செல்வரத்தினம், எஸ். துரைசிங்கம், எஸ். வல்லிபுரம், கே. ஐயாத்துரை ஆகிய 9 சந்தேக நபர்களும் மீண்டும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு வி. பி. சுந்தரலிங்கம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

எஸ். பொன்னுத்துரையை பிணையில் செல்ல நீதிபதி அனுமதித்தார்.

## முதல் ஆண்டு நினைவு அஞ்சலி



அன்புடையீர்,
13-2-82 சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்
உயர்திரு. வல்லிபுரம் சுப்பிரமணியம் அவர்களின் முதலாவது ஆண்டு சிராத்த தினம் நிகழும் துந்துபி வருடம் மாசி மாதம் 20-ந் திகதி 3-2-83 வியாழக்கிழமை பகல் எங்கள் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதமாக சமூகம் தந்து அன்னாரின் ஆத்மசாந்தியடைய பிரார்த்தித்து, சபையைச்சிறப்பிக்கும்வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்
(மனைவி) திருமதி சு. பிள்ளையம்மா,
(பிள்ளைகள்) சு. நீதிராசா, சு. சிறீஸ்கந்தராசா. சு. சுசீலா, சு. ஜெயராசா, சு. விஜயராசா, சு. மாலினி, சு. காமினி.
பருத்தித்துறை ரோட்.
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். (6073)

## லொறிச்சாரதி பதவிக்கான

# விண்ணப்பம்

(தற்காலிகம்)

முத்துஐயன்கட்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் இருந்து லொறிச்சாரதி [தற்காலிகம்] பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பத்துடன் கல்வித்தராதரப்பத்திரம், பிறப்புச்சாட்சிப் பத்திரம், வதிவிட அத்தாட்சிப் பத்திரம் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் 10-02-1983-ந் திகதி நண்பகல் 1-00 மணிவரை

தலைவர், முத்துஐயன்கட்டு ப. நோ. கூ. சங்கம்,
ஒட்டுசுட்டான்

என்ற முகவரிக்கு நேரடியாகவோ, அல்லது பதிவுத் தபால் மூலமோ சேர்ப்பித்தல் வேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக இரண்டு வருடம் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**தராதரம்:**
5-ம் வகுப்புத் தராதரப்பத்திரத்துடன் பஸ்/லொறி/உழவு இயந்திரப் பெட்டியுடன் செலுத்துவதற்கான சாரதி அனுமதிப் பத்திரத்துடன் 4 வருட கால அனுபவம்

**வயது:**
23 வயது தொடக்கம் 45 வயது வரை

**சம்பளம்:**
நாளொன்றிற்கு ரூபா 22-50 சதம் வழங்கப்படும். பதவி நிரந்தரம் ஆக்கப்பட்டதும் 300/= 15×12: 20×3=540-00 வழங்கப்படும்.

**பிணைப்பணம்:**
ரொக்கம் சம்பளத்தின் ஐந்து மடங்கு.
ஆதனப்பிணை ரூபா 10,000/- காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் உத்தரவாதமுறி செலுத்தப்படுதல் வேண்டும்.

ஒப்பம்
ஆ. மகேச்சுரன்,
பொதுமுகாமையாளர்,

**முத்துஐயன்கட்டு ப. நோ. கூ. சங்கம்,**
ஒட்டுசுட்டான்.

01-02-1983. (6076)

## குருத்துவப் பணியின் வெள்ளி விழா இன்று

(யாழ்ப்பாணம்)

அருள் திரு. யோசப் பொன்னையா இம்மனுவேல் செல்வராசா அடிகளாரின் 'குருத்துவப் பணியின் 'வெள்ளி விழா' இன்று யாழ். புனித மரியன்னையின் பேராலயத்தில் நடைபெறும்.

அருள் திரு. செல்வராசா அடிகளார் 1958-ம் ஆண்டு குருத்துவம் பெற்று, மன்னாரில் சேவையாற்றினர். அதன் பின் காலஞ்சென்ற யாழ். ஆயர் மகா. வந். டாக்டர் எமலியானஸ் பிள்ளையின் காரியதரிசியாகவும், அதைத்தொடர்ந்து ஊர்காவற்றுறை, வசாவிளான் ஆகிய பகுதிகளின் பங்குக் குருவாகவும் கடமையாற்றினர். 1974-ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை, யாழ். மேற்றிராசனத்தின் பிரதம குருவாகப் பணியாற்றி வருகின்றார்.

யாழ். ஆயர் மகா. வந். பி. தியோகுப்பிள்ளை ஆண்டகையின் தலைமையில் நடைபெறும் மேற்படி பாராட்டு விழாவுக்கான சகல ஏற்பாடுகளையும் டாக்டர் ஜே. பி. ஸி. பீலிப் மேற்கொண்டுள்ளார்.

## 'வெடிவைத்துமீன் பிடிப்போர்!'

(மன்னார்)

மன்னார் மாவட்டக்கடல்பிரதேசத்தில் சட்ட விரோதமாக டைனமெட் வெடி வைத்து மீன் பிடிப்பவர்கள் பற்றிய தகவல்களை பொதுமக்கள் பொலிசாருக்கு வழங்கினால் சட்ட விரோதமாக டைனமெட் வெடிவைத்து மீன்பிடிப்பதை முற்றாகத் தடை செய்ய முடியும்.

இவ்வாறு வங்காலை புனித ஆனாள் கடற்தொழில் விரிவாக்க சேவா சங்கத்தின் உறுப்பினர்களுடன் நடத்திய கலந்துரையாடலின் போது மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு பொன் சுகுணேந்திரன் தெரிவித்தார்.

## பாராட்டு

[மன்னார்]

மன்னார் மாவட்ட அபிவிருத்திச் சபையினால் வழங்கப்படும் புலமைப் பரிசில் திட்டத்தை உருவாக்கிய மன்னார் முன்னாள் திட்டமிடல் பணிப்பாளர் திரு எஸ். தேவகலரன் பாராட்டப்பட்டார்.

மன்னார் பட்டின சபை முன்றலில் நடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற புலமைப் பரிசில் வழங்கும் விழாவின் போதே மன்னார் எ. பி திரு பி. எஸ். சூசைதாசன், மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் ஆகியோர் மன்னார் திட்டமிடல் பணிப்பாளரைப் பாராட்டினர்.

## வெள்ளி விழா நடாத்தத் தீர்மானம்

(பண்டத்தரிப்பு)

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி பழையமாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் வைத்திய கலாநிதி பாக்கியநாதர் அத்தானாகியார் தலைமையில் நடைபெற்ற போது கல்லூரி அதிபர் அருட்திரு அன்ரன் இராசநாயகம் அடிகள் குருப்பட்டம் தரித்து 25 ஆண்டுகள் நிறைவு பெறுவதையொட்டி வெள்ளி விழா வைபவமொன்றை நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:-

தலைவர்:- பாக்கியநாதர் அத்தானாசிரியார்
உபதலைவர்கள் எம் கே பத்மநாதன் க. தம்பிமுத்து இ. வேலாயுதபிள்ளை செயலாளர் என். பி இராசநாயகம் பொருளாளர் கே. கபிரியேல்பிள்ளை செயற்குழு உறுப்பினர்களாக ஒன்பது பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# சேவை; திறமைக்கு முதலிடம்! இந்தியப்பிரதமர் பணிப்புரை

## ஓய்வு பெற்றோருக்கு மீண்டும் வேலை இல்லை

புதுடில்லி, பெப். 2

''நாட்டின் அரச நிர்வாக அமைப்பை நெறிப்படுத்தி; ஊழல்களை முறியடிக்கவும், மக்களின் சலிப்புணர்வைப் போக்கவும் அமைச்சர்கள் தத்தமது இலாகாக்களின் தலைவர்களை நன்கு கண்காணிக்க வேண்டும். அதிகாரிகளின் சேவை உயர்வுக்கு அமைச்சர்கள் செய்யும் சிபாரிசுகளில் சேவைக்கும், திறமைக்கும் மட்டுமே இடம்கொடுக்க வேண்டும்''

இம்மாதம் முதலாம் திகதி மத்திய அரசின் அமைச்சர்களுக்கு பிரதமர் திருமதி இந்திராகாந்தி நிர்வாக சேவை பற்றி விடுத்துள்ள புதிய உத்தரவில் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

இப்புதிய உத்தரவின் மூலம் அரசசேவையில் இருந்து ஓய்வு பெற்றவர்களை மீண்டும் சேவையில் அமர்த்தவோ, சேவை நீடிப்பு வழங்கவோ தடை செய்யப்பட்டுள்ளது. தற்போது பாரதத்தில் 58 வயதுவரையுமே ஒருவர் அரச சேவையில் சேவையாற்றமுடியும். இச்சேவைத் தடை விஞ்ஞானிகள், பாதுகாப்புச் சேவைத்துறைகளுக்கு விதிவிலக்களித்துள்ளது. (உ)

## பிரிட்டனில் வாகன இருக்கைப்பட்டிகளை கண்டிப்பாக அணியவேண்டும்!

லண்டன் பெப். 2

சகல மோட்டார் வாகன ஓட்டிகளும், அருகில் அமர்ந்து பயணஞ்செய்பவர்களும வாகனங்களிலுள்ள இருக்கைப்பட்டிகளை கண்டிப்பாக அணிந்து கொள்ள வேண்டும். என்று பிரிட்டனில் புதிய சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது

இப்புதிய சட்டத்தை மீறும் பட்சத்தில் 50 ஸ்டேர்லிங் பவுண்கள் அபராதமாக விதிக்கப்படும்.

'தேன்நிலவுத் தம்பதிகளே இருக்கைப்பட்டிகளை அணிந்து கொள்வதில் அதிகளவு அசட்டை செய்கிறார்களென்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

புதியசட்டம் நடைமுறைக்கு வந்ததை ஒருபத்திரிகை ''ஒருவரின் சொந்த விருப்பு வெறுப்புகளில் இச்சட்டம் தலையிடுகிறது'' என்று எழுதியுள்ளது.

ஆனாலும் பிரிட்டனில் வாகனவிபத்து இழப்புகளுக்கு எதிராகப் பிரசாரம் செய்துவரும் கூட்டத்தவர் இச்சட்டத்தை வரவேற்றுள்ளனர்.

பிரிட்டனில் ஆண்டொன்றுக்கு 30,000 வாகன ஓட்டிகளும் பயணிகளும்விபத்துக்களில் இறந்து விடுகின்றனர் அல்லதுபடுகாயமடைகின்றனர் என்று புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. (கி)

## "ஜனநாயகத்தில் மக்கள் தீர்ப்புத்தான் இறுதித் தீர்ப்பு!" – நாஞ்சில் மனோகரன்

மதுரை, பெப். 2

'மாநிலங்களின் உணர்வுகளை மத்திய அரசு மதிக்கத் தவறியதே ஆந்திரா, கர்நாடக மாநிலங்களில் இந்திரா காங்கிரஸ் தோல்வி பெற்றதற்கு காரணமாகும்' என்று தி. மு. க. துணைப்பொதுச் செயலாளர் நாஞ்சில் மனோகரன் மதுரை ஜீவாநகரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

'ஜனநாயகத்தில் மக்கள் தீர்ப்புதான் இறுதித்தீர்ப்பு மக்கள் விரும்பித் தேர்ந்தெடுத்துள்ள தெலுங்கு தேசக் கட்சியின் ஆட்சியோ, அதன் தலைவர் நடிகர் என். ரி. ராமராவ் முதலமைச்சராகியமையோ யாரும் வருத்தம் தெரிவிப்பதில் அர்த்தமில்லை, முதலமைச்சர் ராமராவைப் பற்றி தனிப்பட்ட விரோதம் எங்களுக்கு இல்லை. கிருஷ்ணா நதிநீரிலிருந்து ஒரு சொட்டும் தமிழகத்துக்கு விடமாட்டேன் என்று கூறித் தமிழர் நலனை விரும்பாதவராக இருந்தமையாலேயே நாம் அவரையும் அவர் கட்சியையும் ஆதரிக்கவில்லை இதனை எமது கழகத் தலைவர் கலைஞர் மு. க. வே. பகிரங்கமாகக் கூறியிருந்தார்.

'ஆனால் தமிழக முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரன் கர்நாடக மாநிலத்தில் கோலார்த் தொகுதியில் மட்டும் தமது அ. தி. மு. க. வேட்பாளரை நிறுத்தி மீதித் தொகுதிகளில் இந்திரா காங்கிரஸை ஆதரித்தார். தேர்தலின்பின் கர்நாடக மாநில கூட்டரசுடன் நட்புப் பாராட்டுகின்றார். இது அவருக்கு கைவந்த கலையான இரட்டை வேட நடிப்பாகும்' என்றார். (உ)

## "கர்நாடகத்தில் ஜனதா - கிரந்திரங்கா இணைப்பு உறுதியானதல்ல"

திருவனந்தபுரம், பெப். 2

'கர்நாடக மாநிலத்தில் ஆட்சியை ஏற்றுள்ள கூட்டுக் கட்சிகளான ஜனதா கட்சி- கிரந்தி ரங்கா கட்சிகளுக்கு இடையே ஏற்பட்டுள்ள இணைக்கம் உறுதியான இறுதி இணைப்பு அல்ல. கிரந்திரங்கா கட்சி தனது தனித்துவத்தைப் பேணிநிற்கிறது' என்று ஜனதா கட்சித் தலைவர் திரு. சந்திரசேகரரை சந்திக்கச் செல்லும்முன் கிரந்திரங்கா கட்சித் தலைவர் பங்காரப்பா செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

'நானும், எனது கிரந்திரங்கா கட்சியும் ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சியின் ஆதரவைப் பெற்று கர்நாடகத்தில் ஆட்சியை ஏற்கப் போவதாகக் கூறப்படுகிறது. இதில் உண்மையில்லை. இதனை பொறுப்பேற்க வேண்டும். இக்கருத்து தவறான வீண் புரளியாகும்' என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

## அஸாம் தேர்தல்: அரசு அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை

கௌகாத்தி, பெப். 2

அஸாமில் தேர்தல் வேலைகளில் ஈடுபடமறுத்த அரச சேவை அதிகாரிகள் அவசர சேவை சட்டத்திின்கீழ் கைது செய்யப்பட்டு, அவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

அஸாம் மாநில சட்டப் பேரவை தேர்தல் பிரசாரம், ஆரம்பித்துள்ளது. இதனை அடுத்து தலைநகரான கௌகாத்தியிலும் பிற மாவட்ட நகரங்களிலும் குண்டுவெடிப்பு, ஆள்கடத்தல், தீவைப்பு போன்ற வன்முறைச் சம்பவங்கள் பெருமளவில் தலைதூக்கியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு செய்திகள் கூறுகின்றன.

மாநில அரசின் முன்னாள் அமைச்சர் உ. பேன்தாஸ் வீட்டில் வைக்கப்பட்ட வெடிகுண்டு வெடித்ததால் வீட்டுச் சுவரின் ஒருபகுதி இடிந்து விழுந்தது. எவரும் காயமடையவில்லை.

மற்றுமொரு வெடிகுண்டு அஸாம் மாநிலத்தின் விமான நிலையமான 'போர்ஜார்' அருகிலுள்ள ராமகிருஷ்ண ஆச்சிரம வாசலில் வெடித்தது சேதங்கள் தெரிவிக்கப்படவில்லை. (உ)

## இந்திய-சீன பேச்சுக்கள்

பீக்கிங், செப். 2

பீக்கிங்கில் இந்திய-சீன அதிகாரிகளுக்கிடையில் நடந்த எல்லைப் பிரச்னை தொடர்பான பேச்சுவார்த்தையில் ஆக்கபூர்வமான பெறுபேறுகள் எதுவும் ஏற்படவில்லை.

இரு நாடுகளுக்கிடையில், விஞ்ஞான, கலாச்சார வர்த்தக அபிவிருத்திபற்றி இணக்கம் காணப்பட்டது. [உ]

## கருணாநிதி பார்வையில் ஆடல்தெய்வம் நடராஜர்!

சென்னை பெப், 2

கடந்த வாரம் தமிழக பிரமுகர் ஒருவரின் புதல்வியின் பரத நாட்டிய அரங்கேற்றத்துக்கு கலைஞர் மு. கருணாநிதி தலைமை வகித்தார்.

அந்த அரங்கேற்ற நிகழ்ச்சியில் பரதக்கடவுள் நடராஜரின் ஆடல் கோலம் தனக்கு எதைப்புகட்டுகிறது. என்பது பற்றி சிறுவிளக்கத்தை கலைஞர் கருணாநிதி வழங்கினார். அவர் கூறிய அந்த விளக்கம் இதுதான்.

''நடனத்திற்கு நடராஜர்சிலை சின்னமாக இருக்கிறது. அந்தச் சிலையை உற்றுப்பார்ப்பீர்களானால் நடராஜர் கையிலுள்ளது உடுக்கு! ஆடுகிறவளுடைய இடை உடுக்கைப்போல நடுவே குறுகி இருக்க வேண்டுமென்பதற்கு அடையாளமாக அது இருக்கின்றது.

மற்றொருகையில் இருக்கிறது அக்கினி! ஆடுகின்றவன் கோபத்தை பாவமாகக் கொள்கின்ற நேரம் அவளது கண்கள், முகம் யாவும் அக்னிபோல் செந்நிறமாக மாற வேண்டுமென்பதை உணர்த்துகிறது.

தலையிலே கங்கை! குளிர்ச்சியை வெளிப்படுத்தும் போது முகத்தில் புன்முறுவல் தோன்றுகையில் அது எந்த அளவிற்கு குளிர்ச்சியாக இருக்க வேண்டுமென்பதனை அறிவுறுத்துகிறது!

உடலில் பாம்பு மாலையாக இருக்கின்றது. ஆடுபவள் பாம்பைப்போல உடலை நெளித்து வளைத்து ஆட வேண்டும். அந்த அளவிற்கு உடல்வாகு அமைய வேண்டும் என்பதை விளக்குகிறது!

கீழே ஒருவனைப்படுக்க வைத்து அதன்மீது ஏறி நர்த்தனம் புரிகிறார்! நடராஜர் ஒரு மனிதன் கீழே படுத்திருக்கின்றபோது அவனுக்கும நோகாமல் வலியேற்படாமல் ஏறிநின்றால் எப்படி இருக்குமோ அதைப்போல அவ்வளவு பவித்திரமாக பாதங்களைப் பதித்து ஆட வேண்டும என்பதையே அக்கோலம் சித்தரிக்கின்றது!

இவற்றுடன் நம்மவரால் 'திருவாசி' என்று அழைக்கப்படும் ஒன்று நடராஜர் சிலையை சுற்றிவரக்காணப்படுகிறது. அந்த திருவாசி, அமைப்பு தாளம் – இராகம் – பாவம் அத்தனையும் பிசகிவிடாது கட்டுக்கோப்பாக விளங்க வேண்டுமென்பதை வலியுறுத்துகிறது.

இவ்வளவு இலக்கணங்களும் கொண்டமைந்ததே உண்மையான ஒரு பரத நாட்டிய நிகழ்ச்சியாகும்'' என்றார். (கி)

## "குடியேற்றக் கொள்கை: மாற்றம் இல்லை!" இஸ்ரேலிய பிரதமர் அறிவிப்பு

ஜெருசலம், பெப். 2

''இஸ்ரேல் கைப்பற்றியுள்ள பிரதேசங்களில் யூத மக்களைக் குடியேற்றுவது தடுக்கமுடியாதது இக் குடியேற்றக் கொள்கையை இஸ்ரேல் கைவிடமாட்டாது'' என்று இஸ்ரேலிய பிரதமர் பெகின் இஸ்ரேலியப் பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

இஸ்ரேல் – எகிப்து உறவுகளில் ஏற்பட்டுள்ள தடைகள் பற்றிய கடிதமொன்றினை இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் எகிப்திய வெளிவிவகார அமைச்சிடம் ஒப்படைத்துள்ளதாகவும் பிரதமர் பெகின் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். [உ]

## நெல்லை நெடுமாறன் தெரிவானார்

காஞ்சிபுரம், பெப். 2

தி. மு. க வின் வேட்பாளராக நெல்லைநெடுமாறன் திருச்செந்தூர் இடைத்தேர்தலில் போட்டியிடுவதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தி. மு. க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி அறிவித்துள்ளார்.

கலைஞர் மு. கருணாநிதி திருச்செந்தூர்தொகுதியின் இடைத்தேர்தலில் தி. மு. க. வேட்பாளர் நெல்லை நெடுமாறனை ஆதரித்து வெற்றிபெறச்செய்வதற்காக அ. தி. மு. க. தவிர்ந்த ஏனைத்துக் கட்சிகளின் ஆதரவைக் கோரியுள்ளார். (உ)

# அமெரிக்க அதிபர் யோசனை சோவியத் நிராகரித்தது!

மாஸ்கோ, பெப். 2

ஐரோப்பாவில் ஏவுகணைகள், அணுவாயுதங்களை வைப்பது தொடர்பான உச்சிமகாநாட்டுக்கான அமெரிக்க ஜனாதிபதி றீகனின் யோசனையை தாம் நிராகரித்துள்ளதாக சோவியத்யூனியன் தலைவர் யூரி அந்திரபபோவ் 'பிராவ்டா' பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில் தெரிவித்துள்ளார்.

சோவியத் அதிபர் தமது பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

''அணுவாயுதங்கள் ஏவுகணைகளை ஐரோப்பாவில் வைத்திருப்பது தொடர்பான உடன்படிக்கையில் தாம் கையொப்பம் இடத் தயார் என்று ஜனாதிபதி றீகன் ஐரோப்பிய மக்களுக்கு விடுத்துள்ள செய்தி அறிக்கை வெளியிடுவது இதுதான் முதல்தடவையல்ல இதனை ஒருபோதும் சோவியத் ஏற்கத் தயாரில்லை. இதுதொடர்பானபேச்சுவார்த்தையில் சோவியத் குழுவுடன் அமெரிக்கக் குழு இணக்கம் காணத் தவறியமை மேற்கு ஜெர்மனியின் தேசியப் பாதுகாப்பிற்கு ஏற்பட்டுள்ள பெரும் அபாயமாக சோவியத் யூனியன் கருதுகின்றது. அண்மையில் நடைபெற்ற ஜெனீவா பேச்சுக்களின் தோல்வியால் மேற்கு ஜெர்மனி 'நேட்டோ' அணுவாயுத ஏவுகணைகள் வைக்கப்படுவதன் மூலம் கேந்திர அரசியல்நிலை முழுமையாக மாற்றமடையும். மேற்கு ஜெர்மன் உட்பட மற்றும் 4 ஐரோப்பிய நாடுகளில் ஏவுகணைகளை வைப்பதே 'நேட்டோ' திட்டமாகும்'' [உ]

### மணிவாக்கு

பாடசாலைப் படிப்பேயில்லாதவன் சரக்குவண்டியிலுள்ள பொருள்களைக் களவெடுக்கக்கூடும்; ஆனால் பல்கலைக்கழகப் படிப்புடையவனோ முழு றெயில் பாதையையே அபகரிக்கக் கூடியவனாகிறான்.

—ரூஸ்வெல்ட்

# நமது நோக்கு

## அரசியல் அரங்கில் எல்லைத் தகராறுகள்

யாழ்ப்பாணம் பெரிய கோர்ட்டில் காணி வழக்கென்றால் குறைந்தது இரண்டு ஐந்தாண்டுத் திட்டம்; நெய்க்குடம் உடைத்த கதை; யாருக்கு வேட்டையென்பதை பழமொழி பகர்கின்றது. காணி கானல் நீராகப் போவதுமுண்டு.

இது யாழ்ப்பாணத்தின் தனிமரபென்று இன்று கொள்ளமுடியாது. தேசிய, சர்வதேச நிலைமைகளில் காணி வழக்கென்பதை எல்லைப்பிரச்னையென்று சொல்லப்படுகின்றது.

ஐரோப்பாவில் அல்செஸ் லொறெயின் யாருடையதென்ற கேள்விக்கு அங்கு நடைபெற்ற பல கடந்த கால ஐரோப்பிய யுத்தங்கள் சரியான தீர்வுகாணத் தவறின.

இன்று ஆசியாவிலேயுள்ள முப்பெரும் தேசங்கள் எல்லைப் பிரச்னை காரணமாக பெரும் பிணக்கில் காலங் கழிப்பதை நாமறிவோம்; ஆசிய கண்டத்தின் கெடுபிடி யுத்தம் இது.

உலகின் இருபெரும்கம்மியூனிச நாடுகள் -ரஷ்யாவும் சீனாவும்-பல வருடங்களாக ஒருவருக்கொருவர்பகைமை பாராட்டி வருவது விசித்திரம் போல் தோன்றும்; லட்சியம் ஒன்றானாலும், இன விரோதம் இரத்தத்தில் ஊறிவிடுவது இயல்பு: அது சந்தேகமான காரணமென்று கொண்டால், ரஷ்யா ஸாரின் சர்வாதிகார ஆட்சியில் சீனாவின் 15 லட்சம் சதுரமைல் பரப்பை அபகரித்த செயல் இன்றும் ஒற்றுமைக்கு முட்டுக்கட்டையாயிருப்பது வரலாற்றின் முக்கிய அம்சம்.

ரஷ்யாவும் சீனாவும் அண்மையில் ஆரம்பித்த சிநேகப் பேச்சுக்கள் எதிர்பார்த்தளவு நற்பயனளிக்கவில்லை; எல்லைப் பிரச்னை பிரபலமடையவில்லை.

ரஷ்யாவும் சீனாவும் நட்பற்ற நிலையிலிருக்கும் சமயத்தில் சீனா இந்தியாவுடன் கொண்ட கோபதாபங்களைத் தணித்துக் கொள்ள விரும்புவது இயற்கை.

அதே சமயம் ஆசிய விவகாரங்களில் ரஷ்ய நாட்டை மட்டும் நம்பியிருப்பது விவேகமல்லஎன்றுகொண்ட இந்தியப் பிரதமர், இன்று சீனாவின் நெகிழ்ந்த நிலையை மணந்து பிடித்து. இருநாடுகளும் பேச்சுவார்த்தை மூலம் தங்கள் தொன்மை சிறப்புடை நட்பைப் புதுப்பிக்க. ஆரம்பித்த செயல் ஆக்க பூர்வமானது.

இந்திய அரசு சீனாவின் ஐம்பதினாயிரம் சதுர மைல் தேசத்தை சுவீகரித்துவிட்டதென்பது சீன வாதம்; தன்னுடைய 12,000 சதுர மைலை சட்ட விரோதமாக சீனா அபகரித்து விட்டதென்று இந்தியா வாதிக்கின்றது இது காரணமாக எழுந்த 1962 யுத்தம் எந்த முடிவையும் காணவில்லை.

ஆசிய அமைதிக்கு பல அச்சுறுத்தல்கள் நிலவிவரும் இவ்வேளையில், இந்தியாவும் சீனாவும் ஒற்றுமைப்படுவது அவசியமென்பதை இரு நாடுகளும் உணர்கின்றன.

அண்மையில் ஆரம்பித்த பேச்சு வார்த்தைகளுக்கு இடராக எழுந்தது ஆசிய விளையாட்டுப் போட்டியில் இடம்பெற்ற துரதிர்ஷ்டவசமான சில சம்பவங்கள்.

மூன்றாவது சுற்றுப் பேச்சு நல்ல முடிவை ஏற்படுத்தும் சாத்தியக்கூறுகள் எட்டத்தில்தானிருக்கின்றன.

இந்த வாரம் மீண்டும் தொடரும் இப்பேச்சுவார்த்தைகளில் சீனாவின் பொருளற்ற சொற் பிரவாகமென்ற நிலை தொடர்ந்தும் இடம் பெறுமோவென்று சந்தேகப்படுவதற்கு இடமுண்டு.

டில்லி அதிகாரிகளின் கருத்தென்னவென்றால் மக்மோகன் Mc Mohan கோட்டிலுக்குத் தெற்குப் புறமான நிலப்பரப்பை சீனா கைவிடுவதென்று சொல்வதும்; இந்தியா கைப்பற்றியிருக்கும் சீனப் பிரதேசத்தை இந்தியா கைவிட்டு உதவவேண்டுமென்பதும் ஒருதலைப்பட்ட நியாயமென்பது.

சீனா கைவிட ஒத்துக் கொள்ள வேண்டுமென்ற நிலப்பரப்பு என்றும் என்றும் இந்தியா ஆட்சியிலிருந்த இந்தியச் சொத்து சீனப் பிரதேசங்களென்று சீனா உரிமைகோரும் நிலங்களும் இந்தியாவினதே!

நடுநிலைமை வகிக்கும் உலக அரசியல் அவதானிகள் இன்று நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் அதிக நற்பலன் கிட்டாதென்று அஞ்சுகின்றனர்.

அது எவ்வாறானாலும் ஒரு போர் போன்ற நெருக்கடி இப்பகுதியில் நிலவுவதால் ஆசியாவின் இவ்விரு 'ஆனைகள்' ஒன்றுக்கொன்று எதிர்த்துப் போராடும் நிலைமையைத் தவிர்க்க இப்போது அரும்பியிருக்கும் சினேகமனப் பான்மை பெரிதும் உதவுமென்று நம்பலாம்.

போட்டி பூசல், பல்வேறு அரசியல்கொந்தளிப்புகள் பலிந்திருக்கும் இப்பரந்த பிரதேசத்தில் நட்புறவுப்பிரயத்தனமே பெரும் பாராட்டுக்குரியது: அரசியல் சாணக்கியம் அவசியமானாலும், சமாதான விருப்பம் ஆக்கபூர்வமான செயல்களுக்கு ஒரு பிரதானமான அறிகுறியாகும்.

### புதியமுருகன் ஆலயம்

[மன்னார்]

மன்னார் தெட்சனா மருதமடு கிராமத்தில் பல்லாயிரம் ரூபா செலவில் முருகன் ஆலயம் ஒன்று விரைவில் நிறுவப்படும் இவ்வாலய திருப்பணி வேலைகளுக்கென தெட்சனா மருதமடு கிராம அபிவிருத்திச் சங்கம் 5ஆயிரம் ரூபாவை திருப்பணிச்சபையிடம் கையளித்துள்ளது.

## அமரர் தம்பிஐயா ஞாபகார்த்த விழா

## நெடுந்தீவில் 5-ல் நடக்கிறது

[நெடுந்தீவு]

முன்னாள் காவலூர் எம். பி. அமரர் ஏ. எல். தம்பிஐயா ஞாபகார்த்த பெருவிழா 5ம் திகதி நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது.

நெடுந்தீவு அறிவுப்பொழில் மன்றத்தின் ஆதரவில் நடைபெறவிருக்கும் இவ்விழாவிற்கு நெடுந்தீவு இந்து இளைஞர் பேரவைத் தலைவர் திரு. இராஜேஸ்வரன் தலைமை வகிப்பார். வடமாநிலக் கல்வி அதிபதி திரு. சிமியாம்பிள்ளை விழாவை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார்.

அன்னாரின் உருவப்படத்தை நெடுந்தீவு, கிழக்கு கிராம சேவை அலுவலர் திரு. நா. கணபதிப்பிள்ளை திரைநீக்கம் செய்து வைப்பார். யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் சிறப்புரை நிகழ்த்தி, சிறப்பு மலரை வெளியிட்டு வைக்க, தொழிலதிபர், திரு. க. கனகராசா முதற்பிரதியைப் பெற்றுக் கொள்வார். புலவர் ஈழத்துச் சிவானந்தன் மலர் வெளியீட்டுரையை நிகழ்த்துவார்.

அன்னாரின் ஞாபகார்த்தமாக நெடுந்தீவு தேவாலயத்தில் விசேட பூசையும், ஆராதனையும் நடைபெறும். இதனைத் தொடர்ந்து அன்னாரின் படம் ஊர்வலமாக நெடுந்தீவு மகாவித்தியாலயத்திற்கு எடுத்துசென்று அங்கு அஞ்சலி செலுத்தப்படும்.

தம்பிஐயா ஞாபகார்த்தமாக நிழல் தரும் மரங்கள் நெடுந்தீவு பிரதான வீதியில் நாட்டப்படும். இம்மரங்களை தொழிலதிபர் திரு. க. கனகராசாவும் மற்றும் நெடுந்தீவிலுள்ள பொதுஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் நாட்டுவர்.

### காவலூரில் இன்று கூட்டம்

ஊர்காவற்றுறை திறந்த வெளிஅரங்கில் இன்று மாலை இரங்கல் கூட்டம் நடைபெறுகிறது. இக்கூட்டத்துக்கு காவலூர் எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமை வகிப்பார்.

## "தமிழ் சமுதாயத்தில் ஊழல் தலைவிரித்தாடுகிறது!"

### உடுப்பிட்டியில் 'அமிர்'

[கரவெட்டி]

''தமிழ் சமுதாயத்தில் கடமை உணர்ச்சி மிக மிகக் குறைந்துள்ளது. எங்கும் ஊழல் தலை விரித்தாடுகிறது. சீனாவில் லஞ்சத்தில் ஈடுபட்ட ஒருவருக்கு தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இவ்விதத் தண்டனை இங்கு வழங்கப்படுமாயின் எத்தனை பேருக்குத் தூக்குத் தண்டனை விதிக்க வேண்டிய நிலை ஏற்படுமோ தெரியாது. எனவே எம்மில் கடமை, கண்ணியம் இருக்க வேண்டும்.''

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகமும், எதிர்க்கட்சித்தலைவருமான திரு. ஏ. அமிர்தலிங்கம், உடுப்பிட்டி இலகடியில் நிறுவப்பட்டுள்ள இராசலிங்கம் சனசமூக நிலையத்திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''அனேகமான சனசமூக நிலையங்கள் பாராளுமன்ற உறுப்பினர் ஒதுக்கீடு செய்யும் நிதியில் இருந்தே உருவாகின்றன. ஆனால் இந்த சனசமூக நிலையமோ பாராளுமன்ற உறுப்பினரின் உதவி இல்லாமல் இப்பகுதி மக்களின் உதவியுடன் கட்டியெழுப்பப்பட்டது என்பதையிட்டு நான் உங்களைப் பாராட்டுகின்றேன்.

''உலகத்தில் பிறந்தவன் எவனும் வாழ்நாள் முழுதும் படித்துக்கொண்டே இருக்க வேண்டும் என்று பண்டைத் தமிழன் கூறினான். ஒருவன் எந்த நாட்டில் பிறந்தாலென்ன எந்த ஊரில் பிறந்தாலென்ன வாழ்நாள் முழுதும் கல்வியை கற்றுக் கொண்டே இருக்கவேண்டும்,

''தமிழ் சமுதாயம் எத்தனையோ பெருமைகளை அடித்துக் கூறினாலு இன்னும் பின்தங்கிய நிலையிலேயே இருக்கின்றதுஎன்பதை நாம் மறந்துவிடக் கூடாது. நவீன கருத்துக்கள் வரும் காலத்தில் நாம் பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டவர்களாக இருக்கின்றோம். கற்பனைப் பொருளுக்கு அஞ்சி அஞ்சி பயப்படுவர்கள் எமது சமுதாயம். இந்த நிலையில் இருந்து விடுபட்டு ஈடேற வேண்டுமாயின் கற்றவர்களாகத் திகழ வேண்டும்.

சாதி வேற்றுமை, சாதிக் கொடுமைகள், சமயவேற்றுமை போன்றவற்றைக் களைந்து சமுதாயத்திற்கு முற்போக்காக எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்று வாழ வேண்டும் இவற்றை மக்கள் மத்தியில் பரப்புவதற்கு சனசமூக நிலையங்கள் ஈடுபட வேண்டும்.

சாதி என்பது தமிழ் இனத்தில் புரையோடி விட்ட புண்ணாக விளங்குகின்றது. சமத்துவம் ஏற்பட்டாலும் சாதி, சாதி என்று நாம் பிரிந்துள்ளோம் இன்றுதமிழன்தமிழனை விசாரித்துப் பார்க்கும் நிலை இருக்கின்றது. இதற்குசாதியே பின்னணியாகவுள்ளது. சாதிப் பேய்கள் அகற்றப்படவேண்டும். தமிழ்சாதி என்றொரு சாதியே இருக்கவேண்டும். நாம் சாதியை ஒழிப்போம். சமத்துவத்தை ஏற்படுத்துவோம் என்று கூறுவதோடு நின்றுவிடாமல் செயலிலும் அதை நிறைவேற்றுவோம்.

உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சனசமூக நிலையக் கட்டிடத்தைத் திறந்து வைத்தார். இவ்விழாவில் கலந்து கொண்ட கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம், சாவகச்சேரி எம். பி. திரு. நவரத்தினம், யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. சு. நடராசா ஆகியோருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

## 'புதிய கட்டத்தை நோக்கி ஈழத்து இலக்கியம்"

பேராசிரியர் சிவத்தம்பி

[மாவிட்டபுரம்]

''இன்றைய காலகட்டம் புதியதோர் போராட்டத்தோடு சம்பந்தப்பட்டதெனலாம். தேசிய இனத்தின் போராட்டத்தின் காலகட்டமே இதுவாகும். இன்றைய காலகட்டத்தில் தேசியஇனப் பிரச்னை ஈழத்து இலக்கியத்தைபுதியகட்டத்திற்குஇட்டு வந்துள்ளது. இந்நிலையில்சேரனின் ''இரண்டாவது சூரிய உதயம்'' என்னும் கவிதைத் தொகுதி மிகவும் பயனுள்ளதாக விளங்குகின்றது. இதனை சிங்கள தமிழ் தலைவர்கள் வாங்கிப்படிக்க வேண்டும், இதன்மூலம் இன்றைய இளஞ் சந்ததியினரின் சிந்தனை வளர்ச்சியினையும், எதிர்பார்ப்புக்களையும்உணர முடியும்.

இவ்வாறு தெல்லிப்பழை ம. நோ கூ. சங்க மேல் மாடியில் இடம்பெற்ற சேரனின் ''இரண்டாவது சூரிய உதயம்'' கவிதைத் தொகுதி வெளியீட்டுவிழாவில் கலந்து விமர்சன உரை நிகழ்த்திய யாழ் பல்கலைக்கழக தமிழ்த் துறைப் பேராசிரியர் திரு. கா. சிவத்தம்பி கூறினார்.

தெல்லிப்பழை ''வயல்''கள் இலக்கிய வட்டத்தின் ஆதரவில் யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு. நா. சுப்பிரமணியம் தலைமையில் இவ்விழா நடந்தது.

(5-ம் பக்கம் பார்க்க)

(இன்று குருகவி மகாலிங்கசிவம் நினைவு தினம்)

## சந்தமிகும் சொல்லாளர்

திருமிகுந்த மகாலிங்க சிவம் என்னும்
நாமத்துத் திறலோய்நீ தான்
இருபெருமை நிலைஉடையாய் எனக்கூற
இணையில்லாப் பெரியை ஆனாய்!
ஒருபெருமை பரீட்சை எடாப் பண்டிதர்என்
றுலகுயர்த்தும் உண்மைத் தன்மை
மறுபெருமை பட்டதாரி கட்குரித்தாம்
பதவியை நீவகுத்ததாலே!

கோவைநகர் ஆசிரிய கல்லூரித்
தமிழ்வரைக் குறித்தேநீ செய்
சேவையை யான்எடுத்தியம்ப அதன்பெருமை
அளவினிலே சிறியதாமோ?
ஆவலுடன் மாணவர்கள் எதிர்பார்க்க
வந்தருளி அரிதே ஆன
காவியங்கள் நயம் விளக்கச்சொலும் நினது
கற்பனைதான் சுழறற் பாற்றோ?

செந்தமிழ்த்தேன் வாயூறும் சிந்தனையிற்
கவியூறும் சிறந்த மேடை
வந்தணைந்தால் பிரசங்கம் வாரிதியாய்
அலை அலையாய் வளர்ந்து பொங்கும்
எந்த நிலைப் பாவலரும் நின்பேச்சிற்
கட்டுண்டே இனிமை கொள்ளச்
சந்தமிகும் அவ்வு ரைக்கு நிகரொப்பார்
இலர் என்றே சாற்றுவேனே!

-- கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை

## நீர்வேலி வங்கி கொலை-கொள்ளை வழக்கு

# காயத் தழும்பை நடேசுதாசன் சாட்சியிடம் காட்டினார்

(கொழும்பு)

பலாலி இராணுவமுகாமில் கடமையாற்றிய மேஜர் அப்துல் ஸஹீர் நீர்வேலி வங்கி கொலை கொள்ளை வழக்கில் மேலும் சாட்சியமளிக்கையில் எதிர்தரப்பு சட்டத்தரணி திரு. சத்தியேந்திரா குறுக்கு விசாரணை செய்தார்.

அவர் கூறியதாவது:

### நடேசுதாசனை விசாரணை செய்தவர்

சத்: நடேசுதாசனை ஆகஸ்ட் மாதம் 7ம் திகதி விசாரணை செய்த பொலிஸ் அதிகாரியின் பெயர் தெரியுமா?

சாட்சி; ஏ. எஸ். பி. குணசிங்கவிடம் நடேசுதாசன் பாரம் கொடுக்கப்பட்டிருந்தது எனக்குத் தெரியும்.

சத்: தடுப்புக்காவலில் எதிரியின் பாதுகாப்பு பற்றிய பிரச்னை உமது மனதைக் குழப்புவதால் நீர் எனது கேள்விகளுக்கு நேரடியாக பதில்கூறுவதைத் தவிர்க்கிறீர்.

சாட்சி: நான் அதை மறுக்கிறேன்.

சத்: நடேசுதாசனை 7ம்திகதி விசாரணைசெய்த பொலிஸ் அதிகாரி யார் என்றுதான் நான் கேட்கிறேன்.

சாட்சி: நான் அன்றையதினம் வேறு செயல்பாடுகளில் இருந்தமையினால் அவர் யாருடைய பாதுகாப்பில் இருந்தார் என்பதையேஎன்னால் கூறமுடியும்.

சத்: நடேசுதாசனைபொலிஸ் விசாரித்ததை நீர் எப்போது தெரிந்து கொண்டீர்.

சாட்சி: 7ம் திகதி இரவு 10 மணிக்கு இராணுவத்தினருக்கு தேநீர் வழங்கப்படும் நேரத்தில் தடுப்புக்காவலில் இருப்பவர்களுக்கும் வழங்கப்படுகிறது. அன்றையதினம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவருக்கு கொண்டுசென்ற தேநீரைத் திருப்பிக் கொண்டுவந்தபோது எதிரி விசாரிக்கப்படுவதாக என்னிடம் கூறப்பட்டது.

சத்: 6வது எதிரியின் உடலில் சில காயங்களைக் கண்டதாகக் கூறினீர்?

சாட்சி: ஆம.

சத்: எங்குவைத்து அவற்றைக் கண்டீர்,

சாட்சி: பாதுகாப்பு அறையில்.

சத்: என்னவிதமான காயம்.

சாட்சி: வலது காலில் ஒரு காயத்தைக் கண்டேன்.

சத்: இக்காயம் துப்பாக்கியில் உள்ள 'பனட்' கத்தியினால் ஏற்பட்ட காயமாக இருக்கலாம் அல்லவா?

சாட்சி: அப்படி ஏற்பட்டதல்ல என்று நான் திட்டவட்டமாகக் கூறுவேன்.

சத்: வலதுகால் வீங்கியிருந்ததைக் கண்டீர்களா?

சாட்சி: இல்லை.

சத்: வேறு ஏதும் பாதிப்புகளைக் கண்டீர்களா?

சாட்சி: இல்லை. ஏற்கனவே டாக்டர் வந்து பரிசோதித்தார். நான் டாக்டர் அல்ல.

சத்: வலது கால் வீங்கியிருக்கவில்லை என்று நீங்கள் சொல்வது பொய் என்கிறேன்.

சாட்சி: இல்லை.

சத்: நீங்கள் 6ம் எதிரியைப் பார்த்திருந்தால் நிச்சயம் வீக்கத்தையும் பார்த்திருப்பீர்கள்.

சா: நான் பார்க்கவில்லை.

(இந்தக் கட்டத்தில் எதிரியிடம் அவரது காலில் இருந்த காயத்தழும்பை நீதிமன்றத்தில் சாட்சியிடம் காட்டுமாறு எதிர்தரப்பு சட்டத்தரணி திரு. சத்தியேந்திரா கேட்டதையடுத்து 6ம்எதிரி நடேசுதாசன் எதிரிகள் கூண்டிலிருந்து இறங்கிசாட்சிக்கூண்டுக்கருகில் வந்து தமது காயத்தழும்பை சாட்சியிடம் காண்பித்தார் பின் எதிர்தரப்பு சட்டத்தரணி கேட்டபடி 6ம் எதிரி நாற்காலியில்அமர்ந்தவாறு தமது காலிலிருந்த காயத்தழும்பை சாட்சியிடம் காட்டினார்).

சத்: இப்போதுவலதுகாலில் காயத் தழும்பு இருக்கிறது தெரிகிறதா?

சா: என்ன தழும்பு என்று என்னால் கூறமுடியாது.

சத்: ஒரு மனிதனின் காலில் இவ்வாறான வீக்கத் தழும்புகள் இருப்பது இயற்கைக்கு மாறானது அல்லவா?

சா: அது சாதாரணமாக ஏற்படக்கூடியதொன்று.

சத்: அந்தக் காயத்தின் மீது உங்கள் முன்னிலையில் தாக்குதல் இடம்பெற்றது. அதனாலேயே அந்தக் காயம் பெரிதாகி தழும்பு ஏற்பட்டது.

சா; நான் அதை மறுக்கிறேன்.

## 'தமிழ்த் தலைவர்களுக்கு பாராட்டக்கூட மனமில்லை!'

### ஆழிக்குமரன் ஆனந்தன் கவலை

(கொழும்பு)

"நான் ஒரு தமிழன்; இதனால் நான் செய்யும் சாதனை நிகழ்ச்சிகளுக்கு ஊக்கமும், உற்சாகமும் தமிழ்த் தலைவர்கள் தரவேண்டும் என்று நான் வற்புறுத்தவில்லை. பாராட்டக் கூடமனமில்லாது ஒதுங்கிப் போவதே எனக்கு மிகவும் கவலையை அளிக்கிறது. என்றாலும் ஆயிரக்கணக்கான தமிழ் இதயங்கள் எனக்குத் தரும் உற்சாகம், மேலும் பல சாதனைகளை நிகழ்த்த வேண்டுமென்ற ஆர்வத்தை ஏற்படுத்துகிறது"

இவ்வாறு உலக சாதனை வீரர் ஆழிக்குமரன் ஆனந்தன் தமக்கு அளிக்கப்பட்டவிருந்துபசாரத்துக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

கலை இலக்கிய பத்திரிகை நண்பர்களால் பம்பலப்பிட்டி கிறீன்லண்ட் ஹோட்டலில் நடாத்தப்பட்ட இந்தப் பாராட்டுபசாரத்துக்கு 'தினகரன்' பிரதம ஆசிரியர் திரு இ. சிவகுருநாதன் தலைமை வகித்தார்.

தொழிலதிபர் திரு வி டி. வி. தெய்வநாயகம்பிள்ளை ஆழிக்குமரன் ஆனந்தனுக்கு மாலை அணிவித்தார். தொழிலதிபர் திரு வி. திருநாவுக்கரசு வெள்ளித்தட்டு வழங்கி ஆழிக்குமரனைக் கௌரவித்தார்.

"தந்தை செல்வா என் முதல் சாதனையின் போது வாழ்த்தினார். பின்னர் நல்லூர் சிவசிதம்பரம், திரு செல்லச்சாமி ஆகியோர் வாழ்த்தினார்கள். அதன் பின்னர் எந்தத் தலைவரும் எனக்குக்கிட்டவரவில்லை. ஏன் தான் அவர்களுக்கு தமிழனைப் பாராட்டக்கூட மனம் வரவில்லையோ தெரியவில்லை" என்று ஆழிக்குமரன் ஆனந்தன் மிகுந்த கவலை தெரிவித்தார்.

திரு க நவசோதி பேசுகையில், நமது நாட்டுப் பாடப் புத்தகங்களிலும் ஆழிக்குமரன் சாதனைகள் இடம்பெற வேண்டுமென்றார்.

திருவாளர்கள் கே. எஸ். சிவகுமாரன், அந்தனி ஜீவா, ஜி போல் அன்ரனி ஆகியோரும் பாராட்டினார்கள். எழுத்தாளர் எஸ். திருச்செல்வம் நன்றி கூறினார்.

### புதிய கட்டத்தை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். பல்கலைக்கழக தமிழ் துறை விரிவுரையாளர் திரு. எம், ஏ நுஃமான் பேசுகையில் கூறியதாவது:

10 ஆண்டுகளின் முன் நான் "கவிஞன்" இதழை நடத்திய போது 300 பிரதிகளே அச்சிட்டேன். இன்று 1000 பிரதிகள் வெளியிடுமளவிற்கு கவிதை பரவலாக மக்களிடம் சென்றுள்ளது. தமிழகத்தோடு ஒப்பிடுமளவிற்கு இவை அளவிலும், தரத்திலும் அதிகமானதே.

தற்போது தமிழகத்தில் தனித்துவமுடையவர்களாக எந்தக் கவிஞனும் இல்லை. பாரதிக்கும், பாரதிதாசனுக்கும் பின்பு அங்கு தனித்துவம்கொண்ட கவிஞர்கள் உருவாகவில்லையெனலாம் ஆனால் இங்கு மகாகவி, நீலவாணன், முருகையன், சண்முகம் சிவலிங்கம், சேரன் என்று தனித்துவமுடைய கவிஞர்கள் பலர் உளர்" என்றார்.

மற்றும் மயிலங்கூடலூர் பி. நடராஜன். யாழ். பல்கலைக்கழக விரிவுரையார் திரு. ஆதவன் ஆகியோரும் விமர்சன உரை நிகழ்த்தினர்.

## புல்மோட்டை வங்கிகொள்ளை முயற்சி வழக்கு:

# குற்றப்பத்திரம் கையளிக்கப்பட்டது

(கொழும்பு)

புல்மோட்டை வங்கி கொள்ளை முயற்சி வழக்கு நேற்று கொழும்பு மேல்நீதி மன்றத்தில் நீதிபதி திரு. ருெபேர்ட் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இவ்வழக்கின் எதிரிகளான மகேஸ்வரன், சிவசுப்பிரமணியம், சர்வேஸ்வரன், நீதிராஜா ஆகியோரிடம் நேற்று குற்றப்பத்திரம் கையளிக்கப்பட்டது

முதலாம் எதிரிசார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி மோதிலால்நேரு, சட்டத்தரணி குமார் பொன்னம்பலம், சட்டத்தரணி கே. வி. மகேந்திரன் ஆகியோர் ஆஜராகினர்.

3ம் எதிரி சார்பில் சட்டத்தரணி குமார்பொன்னம்பலம், சட்டத்தரணி கே. வி. மகேந்திரன் ஆகியோர் ஆஜராகினர்.

2-ம் 4-ம்எதிரிகள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி எம். சிவசிதம்பரம், சட்டத்தரணி எஸ். நவரத்தினம்[கரிகாலன்] ஆஜராகியிருந்தனர்.

அரசதரப்பில் சட்டத்தரணி ஷிராணி திலகவர்த்தன ஆஜரானார்.

நீதிபதி விசாரணையை மே மாதம் 2ம் திகதிக்கு ஒத்திவைத்தார். [இ-லெ]

## நெடுங்கேணி துப்பாக்கிக் கொள்ளை:

# ஒருவர் அடையாளம் காட்டப்பட்டார்!

[வவனியா]

நெடுங்கேணி துப்பாக்கி கொள்ளை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இருவர் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டபோது ஒருவர் சாட்சியினால் அடையாளம் காட்டப்பட்டுள்ளார்.

அடையாள அணிவகுப்பு வவனியா நீதிமன்றத்தில் பதில் நீதிபதி திரு ஆர். வி. விவராஜா முன்னிலையில் நடந்தது.

1983ம் ஆண்டு ஜனவரி 1ம் திகதி நெடுங்கேணி பட்டிகுடியிருப்புஎன்னுமிடத்தில்நடந்த துப்பாக்கி கொள்ளை தொடர்பாக ஒட்டுசுட்டான் பொலிசாரால் பி, புஞ்சுஅப்பு, எம் சமரக்கோன் பண்டா என்ற இருவரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அடையாள அணிவகுப்பின் போது சாட்சிக்காரரான சிவராசா இரண்டாவது சந்தேக நபரான சமரக்கோன் பண்டா என்பவரை அடையாளம்காட்டினார்.

1வது சந்தேக நபரை நீதிபதி 1500 ரூபா காசுப்பிணையில் செல்லவும் அனுமதி வழங்கினார்.

சந்தேக நபரின் சார்பில் சட்டத்தரணி திரு எஸ் சீப்பிலப்பிட்டிய ஆஜராகியிருந்தார்.

## புலேந்திரன் கொலை:

# கொழும்பு விசேட ரகசிய பொலிஸ் வவனியாவில் விசாரணை

[வவனியா]

வவனியா ஐ. தே. கட்சி அமைப்பாளர் திரு. கா. த. புலேந்திரன் கொலை செய்யப்பட்டது தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு கொழும்பிலிருந்து விசேட இரகசிய பொலிஸ் குழுவினர் வவனியா வந்துள்ளனர்.

விசாரணை நடத்திய வவனியா பொலிசார் மேல்விசாரணையை இரகசிய பொலிசாரை நடத்தும்படி கேட்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

புலேந்திரன் கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் நால்வர் ஏற்கனவே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

வவனியாவைச் சேர்ந்த பல இளைஞர்கள் இரகசியப் பொலிசாரினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு பின் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஒரு சிலர் இங்குள்ள இராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணை செய்யப்பட்டனர். அத்தோடு சிலருடைய வீடுகளும் சோதனையிடப்பட்டதாக தெரிய வருகின்றது.

## வெளிநாடு செல்ல ஆசைப்பட்ட யுவதி

# கிணற்றுள் இறந்துகிடந்தார்!

(மாவிட்டபுரம்)

கிணறொன்றினுள் இறந்து கிடந்த 23 வயது யுவதியின் மரணம் தொடர்பாக விசாரணை நடத்திய மல்லாகம் பதில் நீதிபதி தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்துள்ளார்.

மூளாயைச் சேர்ந்த மாணிக்கம் இந்திராணி என்னும் யுவதியே இவ்வாறு இறந்து கிடந்தவராவார்.

சங்கரத்தை காளுவன் வைரவர் கோவிலடியிலுள்ள பாழ்ங்கிணறொன்றினுள் இவரது சடலம் கிடக்கக் காணப்பட்டதையடுத்து காங்கேசன்துறைப் பொலிசாருக்கு தகவல் அறிவிக்கப்பட்டது. காங்கேசன்துறைப் பொலிசார் மரண விசாரணைக்கு ஏற்பாடு செய்தனர்.

மல்லாகம் பதில் நீதிபதி திரு. கே. குணரத்தினம் விசாரணை நடத்தினார்.

காலமானவரின் தாய் பூமணி, சகோதரி லீலா ஆகியோர் சாட்சியமளித்தனர்.

காலமானவர் வெளிநாடு செல்ல ஆசைப்பட்டு வந்ததாகவும், குடும்பத்தின் வறுமை நிலை அதற்கு வழிவகுக்காமையால் அவர் மனமுடைந்திருந்ததாகவும் விசாரணையில் தெரியவந்தது.

காலமானவரின் தந்தை இறந்து விட்டதாகவும் இவருக்கு 11 சகோதரங்கள் உண்டென்றும் தெரிவிக்கப்பட்டது.

சாட்சியங்களையடுத்து மல்லாகம் பதில் நீதிபதி தீர்ப்பு வழங்குவதைஒத்திவைத்தார்.

காங்கேசன்துறைப் பொலிசைச் சேர்ந்த கான்ஸ்டபிள்கள் கே, நிர்மலகுமார், எஸ். மகேஸ் ஆகியோர் விசாரணைக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

## வவனியாவில் உழுந்தின் விலை திடீர் வீழ்ச்சி!

[வவனியா]

சணிசமான அளவு விலையேற்றத்துடன் வியாபாரிகளினால் கொள்வனவு செய்யப்பட்ட உழுந்து இப்போது வவனியாப் பகுதியில் திடீரென விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

நகருக்கு பல பாகங்களிலிருந்தும் உழுந்து வரத்தொடங்கியதே இதற்கு காரணமாகும் என சொல்லப்படுகின்றது.

திடீரென உழுந்தின்விலை குறைவால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வவனியா நகரில் சில வியாபார தாபனங்களில் பொது மக்களை ஏமாற்றும் போலி தராசு உப-உணவு சிறுதானியங்கள் நிறுவப்படுவதாகவும் புகார் கிடைத்துள்ளது

அண்மையில் இப்படி போலி நிறை கூடிய தராசு வைத்து கொள்வனவு செய்த இங்குள்ள ஒரு பிரபல வியாபார நிலைய உரிமையாளர் ஒருவர் அகப்பட்டுக் கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

யாழ். எம். எம்; ஸி. மீதானவழக்கு

# இருதரப்பினரும் கைகுலுக்கி இணக்கம்!

(யாழ்ப்பாணம்)

மின்சார அத்தியட்சகரைப் பயமுறுத்தியதாக, யாழ். மாநகரசபை உறுப்பினர் ஒருவர் மீது குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் சமாதானமாக இணக்கம் காணப்பட்டது.

இவ்வழக்கு யாழ். நீதிமன்றத்தில் நீதிவான் வி. ஜெகசோதி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் யாழ். மாநகரசபை உறுப்பினரான தம்பு கந்தையா, மாநகரசபை மின் அத்தியட்சகர் பொன்னுச்சாமி காங்கேயநாதனைக் கடமை செய்யவிடாது தடுத்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

குற்றச்சாட்டு, பின்னர் பயமுறுத்தியதாகக் குறைக்கப்பட்டு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

எதிரி சார்பில் சட்டத்தரணி ஜிம்மி ராசரத்தினம் சட்டத்தரணி வி நடராசாவின் அனுசரணையுடன் ஆஜரானார். வழக்காளி தரப்பில் சட்டத்தரணி வி. சிவபாக்கியநாதன் ஆஜரானார்.

இருதரப்பினரும் வழக்கை சமாதானமாக இணங்க சம்மதித்தைத் தொடர்ந்து எதிரியும் வழக்காளியும் நீதவான் முன்னிலையில் கைகுலுக்கிக் கொண்டனர். இதனைத் தொடர்ந்து வழக்கு சமாதானமாக இணங்கப்பட்டது.

(மா-க)

## ஏழைப்பிள்ளைகளுக்கு விமோசனம்

[புலோலி]

அச்சுவேலிக் கிராமோதய சபைப்பகுதியில் உள்ள ஏழைப் பாடசாலைப் பிள்ளைகளுக்கு விமோசனம் அளிப்பதற்கான நடவடிக்கைகளை அச்சுவேலிக் கிராமோதய சபை மேற்கொண்டு வருகின்றது.

இதற்கு முன்னோடியாக இப்பகுதியில் உள்ள ஏழைப் பாடசாலைக் குழந்தைகளுக்கு இலவசமாகப் பயிற்சி புத்தகங்களை [கொப்பிகள்] வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் கோப்பாய் கல்வி வள நிலையத்தின் ஆதரவுடன் இத்திட்டம் செயற்படுத்தப்பட உள்ளது என்றும் இத் திட்டத்திற்கு வர்த்தகர்கள், நலன் விரும்பிகள் உதவி புரிய வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டு இருப்பதாகவும் அச்சுவேலிக் கிராமோதய சபைத்தலைவர் திரு கே.இராஜதுரை தெரிவித்தார்.

இலங்கை கடல் பாசிகளில்

# புற்றுநோயைத் தடுக்கும் இரசாயனப் பொருள் உண்டு

## சோவியத் - இலங்கைவிஞ்ஞானிகள் தகவல்

(கொழும்பு)

நீர்கொழும்பு, மன்னார் கடற்கரைப் பிரதேசங்களில் காணப்படும் கடற்பாசிகள், நட்சத்திரமீன்கள் போன்ற மென்மையான கடல்வாழ் பொருட்களில் சிலவகையான புற்றுநோயைக் குறைப்படுத்தக் கூடிய ரசாயனப்பதார்த்தங்கள் காணப்படுவதாக ஆராய்ச்சிகளிலிருந்து தெரிய வந்துள்ளது. காளான்கொல்லித்தன்மையும், நுண்ணுயிர் கொல்லித்தன்மையும் கொண்டரசாயனப் பதார்த்தங்கள் இவைகளில் காணப்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இலங்கை - சோவியத்கூட்டு ஆய்வாளர் குழுவொன்று இந்த ஆராய்ச்சியை நடத்தியுள்ளது. இவர்கள் 56 விதமான கடல்வாழ் உயிர்களை சேகரித்து ஆராய்ந்துள்ளனர். "புரபெஸர் பொகரோவ்" என்ற சோவியத் கப்பலில் இந்த ஆய்வுகள் நடத்தப்பட்டன.

இது தொடர்பாக நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் பேராசியர் ஜியோர்ஜி வி. எலியாக்கோவ் மேற்படி தகவல்களைத் தெரிவித்தார். மேற்படி ஆய்வுகளின்போது ரசாயன பகுப்பாய்வுகளை நடத்தியவரான இப்பேராசிரியர் சோவியத் யூனியனின் விஞ்ஞானக் கழகத்தின் தூரகிழக்கு விஞ்ஞான நிலையத்தின் உபதலைவராவார்.

மருத்துவ முக்கியத்துவமுள்ள நுண்ணுயிர்கள் ஏராளமாக இங்கைக் கடற்கரைகளில் காணப்படுகின்றன

(7-ம் பக்கம் பார்க்க)

பெப்ரவரி 4-ம் திகதி

# தேசிய துக்கதினமாக அனுஷ்டிக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சுதந்திர தினமான பெப்ரவரி 4ம்திகதி தேசிய துக்கதினமாக அனுஷ்டிக்குமாறுகோரி தமிழ் ஈழ விடுதலை அணித் தலைவர் டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கம் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

பெப்ரவரி 3ம் திகதி கடைகளையும் தொழிற்சாலைகளையும் வர்த்தக நிலையங்களையும் பூட்டி எதிர்ப்புத் தெரிவிக்குமாறு அப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், 3ம், 4ந் திகதிகளில் பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகம் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் அனைத்தையும் பகிஷ்கரித்து எதிர்ப்புத் தெரிவிக்குமாறும் கேட்டுள்ளார்.

குறிப்பிட்ட 3ம், 4ம் திகதிகளில் படமாளிகைகளில் திரைப்படங்களைத் திரையிடாது தமிழ் தேசிய இனத்தின் அமைதி வழிப்போராட்டத்துக்கு ஒத்துழைக்குமாறும் அப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"ஜனநாயக- மனித விரோதப் பயங்கரவாத தடைச்சட்டத்தை திரும்பப்பெறு"

"தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மதகுருமார், வைத்தியர்கள், விரிவுரையாளர் தம்பதிகள், மாணவர்கள், இளைஞர்கள் சகலரையும் விடுதலை செய். அல்லது சாதாரண சட்டத்தின்கீழ் விசாரணைசெய்" என்றும் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (மா)

முந்துங்கள்!!

ஆர்பிகோ

HURRY!

(ஆணித்தரமானது)

உற்பத்திப் பொருட்கள்

★ உருக்குத் தளபாடங்கள்
கதிரைகள், மேசைகள், படுக்கைகள், தொலைபேசி ஸ்ராண்டுகள், அலுமாரிகள், கபினெற்றுகள், ஸ்டுல் முதலியன

★ காரியாலய உபகரணங்கள்
மேசைகள், கதிரைகள் பைல் கபினெற்றுகள்

★ மெத்தை வகைகள்
ஆர்பிபோம் மெத்தைகள் (சகல அளவுகளிலும்) லற்டெக்ஸ் போம் குஷன்கள்

★ விளையாட்டுப் பொருட்கள்
பந்துகள், கிரிக்கெட் பந்து, மட்டைகள், பாவனைப் பொருட்கள், ரப்பர் பாய்கள், தலையணைகள், கால்மிதிகள்

டிரான்ஸ்லங்கா மாக்கெற்றிங் லிமிட்.

(விசேட விற்பனைப் பிரிவு)

இறக்குமதி செய்யப்பட்ட மினிபஸ் டயர்கள் (விலை ரூபா 650/- மட்டுமே)
700x15 750x15 756x16 அளவுகளில் (குறிப்பிட்ட தொகையே குறைந்த விலையில் விற்பனைக்குண்டு.)

இங்கிலாந்திலிருந்து தருவிக்கப்பட்ட அழகு சாதனப் பொருட்கள் குழந்தைகள், ஆடவர், பெண்டிர் அனைவருக்கும் ஏற்றவை.

பவுடர், சவர்க்காரம், நகப்பொலிஷ், உதட்டுச் சாயங்கள் (விசேட கலர்களில்)

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

டிரான்ஸ்லங்கா மாக்கெற்றிங் லிமிட்டெட்,
இல 1, புதிய நவீனசந்தை (முதலாவது மாடி) யாழ்ப்பாணம்.
(போன்: 23027)

# சர்வதேச டென்னிஸ் ஆட்டக்காரர் வரிசையில் ரமேஷ் கிருஷ்ணன்!

பாரிஸ், பெப். 2

தற்போது உலகின் தலை சிறந்த 'டென்னிஸ்' ஆட்ட வீரர்களாக கீழ்வரும் பத்து ஆட்டக்காரர்களும் தெரிவாகியுள்ளனர். அவர்களுக்கு வழங்கப்பட்ட புள்ளிகளும் தரப்பட்டுள்ளன. இந்திய வீரர் ரமேஷ்கிருஷ்ணனும் அவர்களில் அடங்குகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜொஸ் லூயிஸ்கிளார்க் 225 ஆர்ஜன்டீனா], மட்ஸ்விலாண்டர் 157 [சுவீடன்], பெர்னாட் பொய்லு 90 [பெல்ஜியம்], தோமஸ்ஸ்மித் - 90 செக் கோஸ்லாவாக்கியா], ஜோன் அலெக்ஸாண்டர்–75 (அவுஸ்திரேலியா, ரஸல்சிம்ப்ஸன்–52 (நியுஸிலாந்து), பிரான்ஸிஸ்கோ கொன்ஸாலெஸ்– 45 (போட்டோறி கோ), ஆன்ட் ரஸ்கோமஸ்– 45 (ஈக்வடோர்) பட்டுப்ரே–45 [ஐ அமெரிக்கா] ரமேஷ்கிருஷ்ணன்– 45 [இந்தியா]. [கி]

**றீகல்** [யாழ். நகர்]
கடைசி
சில தினங்கள்
எங்க வீட்டுப் பிள்ளை

**சாந்தி** யாழ்.
தினசரி 5 காட்சிகள்
Robert Shaw-Lee Marvin
AVALANCHE EXPRESS
Action-Thriller-Colorscope

**வெல்லி** (மானிப்பாய்)
தினசரி- 6-15, 9-15
சனி.ஞாயிறு2-30
4-2-83 வரை
இதயக்கனி

**ஹரன்** (யாழ்: நகர்)
தினசரி 4 காட்சிகள்
சுதாகர் - ராதிகா
கிழக்கே போகும் ரயில் (கலர்

### சர்வதேச மரதன் வீரர்கள்

# இருவருக்கிடையே ஏப்ரலில் பந்தயம்!

ஆக்லண்ட்,பெப்.2

உலகின் அதிவேக மரதன் ஓட்ட வீரர்கள் இருவருக்கிடையிலான பந்தயம் எதிர் வரும் ஏப்ரல் நியுஸிலாந்தில் இடம் பெறவுள்ளது.

அல்பேர்ட் ! டோஸலாஸர் என்ற அமெரிக்கவீரரும், றொபர்ட்டிகஸ்டெலா என்ற அவுஸ்திரேலிய வீரருமே இந்த இரு அதிவெக ஓட்டக்காரர்களாவர்.

அமெரிக்கவீரர் ஸலாஸர் 26 மைல்கள் 385 யார்கள் மரதன் ஓட்டத்தூரத்தை 2மணி 13 செக்கன்களில் நிறைவு செய்திருந்தார். இந்த சாதனை 1981ம் ஆண்டு நியுயோர்க் நகர மரதன் ஓட்டப்போட்டியில் ஏற்படுத்தப்பட்டது.

அவுஸ்திரேலிய வீரர் டிகஸ்டெலா காமன்வெல்த் வீரராவார். இவர் அமெரிக்க வீரரைவிட ஐந்து செக்கன்கள் குறைவாக ஓடி ஜப்பானின் புக்குஓக்கா நகர மரதன் ஓட்டத்தை நிறைவு செய்தார். 80 ம் ஆண்டில் இந்த ஓட்டம் இடம் பெற்றது.

ஏப்ரலில் இந்த இரு அதிவேக மரதன் வீரர்களுடன் பிரிட்டன் நியூஸிலாந்து, அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த உலகின் முன்னணி மரதன் வீரர்கள் சிலரும் போட்டியிடுவார்கள். (கி)

# கம்பூச்சியா நிலைமை பற்றி பிரெஞ்சுப் பத்திரிகையாளர்

பாரிஸ், பெப். 2

''கம்பூச்சியா தனது துயர நிகழ்வுகளிலிருந்து மீண்டும் புத்துயிர்பெற்றுள்ளது. கிராமப்புறங்களில் பழைய வாழ்க்கைமுறை மறைந்துவிட்டது; நகரங்களில் வர்த்தகம் மறுமலர்ச்சிபெற்றுள்ளது. ஆயினும் அண்மைக்கால துயர நிகழ்வுகளின் விளைவுகள், இன்னமும் இந்த நாட்டிற்கு வருபவர்களின் நெஞ்சை தொடவே செய்கிறது'' என்று பிரெஞ்சு பத்திரிகையாளரான திரு. ஜெர்ஜ் பௌடியூன் என்பவர் எழுதியுள்ளார். இவரது கட்டுரை ''லே மொண்ட் டிப்ளமடிக்'' என்ற பிரபல பிரெஞ்சு சஞ்சிகையில் வெளியாகியுள்ளது.

கடந்த ஆண்டில் பிறப்புப் பதிவில் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி காணப்பட்டது. கம்பூச்சியாவின் சகல பகுதிகளிலும் தற்போது பிறப்புவீதம் அதிகரித்துள்ளது. ஆயினும் பொதுசன அபிப்பிராயத்தின் படி பிறப்பு வீதம் 5 சத வீதமாகவும், இறப்பு வீதம் 0. 26 சத வீதமாகவுள்ளது. 1979ன் தொடக்கத்தில் 45 லட்சமாக இருந்த ஜனத்தொகை 1981ல் 57 லட்சமாக அதிகரித்துள்ளது. 1970 முதல் நடைபெற்ற பயங்கரமான ஆட்சி நடவடிக்கைகளின் விளைவால் காம்பூச்சிய ஜனத்தொகையில ஆண்களின் தொகை வீச்சியடைந்துள்ளது மொத்த ஜனத்தொகையில் பெண்கள் 60–70 சத வீதமாக உள்ளனர்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (உ)

# சத்யஜித்ரே படங்களுக்கு மாஸ்கோவில் பாராட்டு

மாஸ்கோ, பெப். 2

இந்திய திரைப்பட டைரக்டரான சத்யஜித் ரேயை பாராட்டும்விழா மாஸ்கோவில் நடைபெற்றது. சோவியத்–இந்திய நட்புறவுச் சங்கத்தின் ஆதரவில் இவ்விழா நடைபெற்றது.

''கறுப்பு மலை'', ''ரிக்கி–திக்கி–தவி'' என்னும் சோவியத்–இந்திய கூட்டுப் படங்களின் தயாரிப்பில் பங்கேற்ற சோவியத் டைரக்டர் அலெக்சாந்தர் ஐசூர்தி பேசுகையில்; இந்திய மற்றும் உலக திரைப்பட வரலாற்றில் சத்தியஜித் ரேயின் படங்கள் ஒரு சிறந்த அத்தியாயமாக விளங்குகின்றன என்றும், இந்தியமக்களின் கடந்தகால, மற்றும்நிகழ்கால நம்பிக்கைகளையும் எதிர்காலக் கனவுகளையும் ரேயின் படங்கள் பிரதிபலிக்கின்றன என்றும் கூறினார்.

உலகப் புகழ்பெற்ற சத்யஜித் ரே. பல தேசிய மற்றும் சர்வதேசியப் பரிசுகளைப்பெற்றுள்ளார். 1979ல் மாஸ்கோவில் நடைபெற்ற 11–வது சர்வதேசப்படவிழாவில் 'முற்போக்கான உலக சினிமாவின் வளர்ச்சிக்காகவும், சோவியத் சினிமாவின் 60–வது ஆண்டு விழா நினைவாகவும்' சத்யஜித் ரேக்குக் கௌரவப் பரிசு வழங்கப்பெற்றது.

சோவியத் திரைப்பட விமர்சகர் ரோமில் சபலேவ் பேசுகையில், 'சோவியத் யூனியனில் ரேயின் படங்கள் பிரபலம் அடைந்திருப்பதைக் குறிப்பிட்டார். சில படங்கள் ரஷ்யனில் மொழி மாற்றம் செய்யப்பட்டன என்றும், பல லட்சக்கணக்கான திரைப்பட ரசிகர்களும் தொலைக்காட்சி ரசிகர்களும் அவற்றைப் பார்த்தனர் என்றும் அவர் கூறினார்.

1979 – ல் ''அயல்நாட்டு சினிமா மேதைகள்'' என்ற வரிசையில் ரேயின் சாதனைகள் பற்றிய சிறப்பு நூல் ஒன்றை ''இஸ்கஸ்துவோ பதிப்பகம்'' 25000 பிரதிகளாக வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. [உ]

**ஸ்ரீதர்** (யாழ்: நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
நம் நாடு

**மனோகரா** [யாழ்நகர்] தினசரி10-30, 2-15, 4-45, 7-00 9-30p.m.
KIRK DOUGLAS in
THE FURY
Color, Adults only

**வின்ஸர்** தினசரி 4 காட்சிகள் (யாழ்நகர்)
✶ சிவாஜி ✶ வாணிஸ்ரீ ✶ பாலாஜி ✶ நாகேஷ்
"வசந்தமாளிகை"
[கலர்]
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி)

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
3-2-83, 4-2-83
NORMAN RAE
(Adults only)

**லிடோ** [யாழ்நகர்]
தினசரி 4 காட்சிகள்
"கமல்-ஸ்ரீதேவி
பதினாறு வயதினிலே

**ராணி** (யாழ். நகர்) தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
ஆந்திரா முதலமைச்சர்
என். டி. ராமராவ், ஜெமினி
சாவித்திரி நடித்த
மாயா பஜார்

**ராஜா** (யாழ்- நகர்) தினசரி 10-00, 2-00, 6-00,9-30
சிவாஜி - சாவித்திரி - தேவிகா-
முத்துராமன் - என். டி. ராமராவ்
கர்ணன்
(ஈஸ்ட்மன் கலர்)
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி

# இன்றைய பலன்

தை மாதம் 21–ந் திகதி
வியாழக்கிழமை
(3—2—83)

மேடம்: இனிமையான அழைப்பு இன்று மலரும். இல்லம் பல்கலைக்கழகமாக மாறும். அறிஞர்களின் வருகை உங்களை உற்சாகப்படுத்தும். சாஸ்திர வழியால் சுண்ணியம்சேரும்.

இடபம்: சங்கடத்தின் மத்தியில் சஞ்சலப்படுவீர்கள். உங்கள் பலவீனத்தை மற்றவர்கள் ஆயுதமாகப் பயன்படுத்த முனைவர், மனத்திடம் இருப்பின் இவர்களை வீழ்த்திவிட முடியும்.

மிதுனம்: சகோதரபாசம் தலைதூக்கும், பிதாவழிச் சுகமும் கிடைக்கும், கைத்தொழில் விருத்திக்கும் இடமுண்டு.

கடகம்: முயற்சியால் உயர்ச்சி உண்டு. பண விவகாரங்களில் நல்ல முன்னேற்றம் ஏற்படும், புதுமையான சம்பவங்கள் நடைபெறும் சுமாரானதினம்.

சிங்கம்: கொள்வனவுகளில் நல்ல திருப்பம், வணிகர்களுக்கு வியாபார விருத்தியுண்டு, கல்வித்துறையில் முன்னேற்றம் தென்படும், அரசியலில் ஈடுபடுவோர் போற்றப் படுவார்.

கன்னி: துன்பத்தின் ரேகை படரும், தூக்கம் கெடும். எதிர்பார்த்ததில் தடை ஏற்படும். மனதில் ஆத்திரம் அலைமோதும், வாகன சாரதி நிதானம் வேண்டும்.

துலாம்: குடும்பத்தில் சுகக் குறைவுகள் தென்படலாம், அதிக அலைச்சலினால் கவலை உருவாகும், முன்னேற்றப் பாதையில் முட்டுக்கட்டை போடுவதற்குமுயற்சிசெய்வர்.

விருச்சிகம்: கடமையாற்றும் இடத்தில் சிறப்புக்கிடைக்கும், புதிய கண்டுபிடிப்புக்களில் அதிக ஆர்வம் பிறக்கும். டாக்டர்கள் போற்றப்படுவார்கள்.

தனு: வாழ்க்கையில்புதிரான நிலைதென்படும், சினேகிதர்களால் கவலை உருவாகும், விவசாயிகளாயின் ஏமாற்றத்திற்கு இடமுண்டு, சிலர் கடன்படவும் நேரிடலாம்.

மகரம்: வாகனம் ஓட்டுவோர்க்கு சிறப்புக்கிடைக்கும், புத்திரர் கல்வியால் புகழ் குவியும், பத்திரிகையாளர்களுக்கு அதிக வருவாய் கிடைக்கலாம்.

கும்பம்: மக்களால் மகிழ்ச்சி புதுமையில் நாட்டம்,முதியவர் ஒருவர் உங்களுக்கு நல்வழி காட்டுவார், வெல்லம்போல இனிக்கும் வாழ்வை மாணவர்கள் நாடுவர்.

மீனம்: விஷமிகள் தொல்லை அதிகரிக்கும், தவறான வதந்திகளைப் பரப்புவதற்கு சிலர்முற்படுவார்கள், எவரிடத்திலும் அதிக பேச்சை வளர்க்க வேண்டாம்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை.

## இலங்கைப்...

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

வென்று அவர்கூறினார். மனித சுகவீனங்களைக் குணப்படுத்துவதற்கு விஞ்ஞான உலகம் இப்போது இயற்கைப் பொருட்களை நாடிச்செல்லத் தொடங்கியுள்ளது. கடந்த பத்து ஆண்டுகளாக நாம் கடல் பொருட்களை நாடி வருகின்றோம் என்றார் பேராசிரியர் எல்யாக்கோவ்.

ஆய்வுக்கப்பலில் மேற்கொள்ளப்பட்ட பூர்வாங்க ஆய்வுகள் மேலும் தொடர்ந்து இருதேச விஞ்ஞானிகளாலும் நடத்தப்படும் என்றும் அறிக்கையொன்று அரசாங்கத்துக்கு சமர்ப்பிக்கப்படும் என்றும் இந்த ஆய்வுக்குழுவுக்குத் தலைவராக இருக்கும் டாக்டர் வி ஏ'ரஸ்காஸோவ் தெரிவித்தார்.

இலங்கை விஞ்ஞான வளர்ச்சிக்கழகத்தின் சார்பில் கலந்து கொண்ட பேராசிரியர் எம். மகேந்திரன், தாம் ஏற்கனவே கடல் பொருட்கள் தொடர்பாக நடத்தியுள்ள ஆய்வுகளை இந்தக் கப்பலிலுள்ள நவீன வசதிகளைக் கொண்டு ஊர்ஜிதம் செய்துகொள்ள முடிந்தது என்றார்

# இந்தோனேஷியா பயணம்



[மானிப்பாய்]

தொழிற்திணைக்களத்தின் தொழிற்சாலைப் பாதுகாப்புப் பிரிவின் வடமாநிலப் பொறுப்பதிகாரி பொறியியலாளர் திரு. பெ சதானந்தன் புலமைப்பரிசில் பெற்று இந்தோனேஷியா பயணமானார். இவர் அங்கு தொழிற்சாலைப் பாதுகாப்பு சம்பந்தமாக சிறப்புப் பயிற்சியைப் பெறுவார்.

முல்லைத்தீவு அளம்பில் எனுமிடத்தை பிறப்பிடமாகக் கொண்ட இவர் மரணவிசாரணை அதிகாரி திரு. எப். ஏ. பெர்னாண்டோ திருமதி பெர்னாண்டோ ஆகியோரின் புதல்வராவார், இவர் சிறந்த ஒரு சமூகசேவையாளரும் விளையாட்டு வீரருமாவார். திரு சதானந்தன் யாழ் சம்பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவராவார்.

# "நாடு சுதந்திரம் அடைந்தும் தமிழருக்கு நன்மை இல்லை"

## — ஈழவேந்தன்

[யாழ்ப்பாணம்]

"450 ஆண்டுகள் அந்நியர் ஆட்சியில் ஏற்படாத அழிவுகள் இந்த 35 ஆண்டுகளில் சிங்கள பௌத்த ஏகாதிபத்தியத்தினால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இழக்கக் கூடாத உரிமைகள் அனைத்தையும் இழந்து நமது மண்ணிலேயே நாம் உரிமையற்ற சமுதாயமாக ஆக்கப்பட்டுள்ளோம்".

இவ்வாறு தமிழீழ விடுதலை அணியின் கருத்தரங்கு ஒன்றில் திரு. ஈழவேந்தன் பேசுகையில் குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலை அணித் தலைவர் டாக்டர் எஸ் ஏ தர்மலிங்கம் தலைமையில் இக்கருத்தரங்கு நடைபெற்றது.

திரு. ஈழவேந்தன் தொடர்ந்து பேசுகையில்: "1948ல் இங்கு கிடைத்த சுதந்திரம் வெள்ளையர் இடத்தில் சிங்கள வரை அமரச் செய்ததேயன்றி எமக்கு எவ்வித நன்மையையும் ஏற்படுத்தவில்லை. மாறாக அழிவின் விளிம்பில்தான் தமிழினம் இன்று வாழ்ந்துகொண்டிருக்கிறது.

"இன்று விடுதலைக்காக நாம் போராடும்போது சிங்கள அரசு அடக்குமுறைகளை எம்மீது திணித்து எம் குரல்வளையை நெருடுகின்றது. எனினும் எதிர்ப்புகளை எந்த நிலையிலும் தளர்த்தத் தயாராக இல்லை என்ற நிலையில்தான் 3-ம், 4-ம் திகதிகளில் ஹர்த்தால், துக்கதினம் என்பவற்றினை ஒழுங்கு செய்துள்ளோம்" என்றார்.

இக்கருத்தரங்கில் திரு. கோவை மகேசனும் உரை நிகழ்த்தினர். [மா]

# இப்படியும் நடக்கிறது

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் எத்தனை பாடசாலைகளில் தொலைக்காட்சி (டெலிவிஷன்) பெட்டிகள் இருக்கின்றன?

கல்வி வசதிகளில் பின்தங்கிய நிலையில் இருக்கும் கிளிநொச்சித் தொகுதியில் உள்ள பாடசாலைகளில் தொலைக்காட்சி வசதிகள் கிடைக்க திரு. வி. ஆனந்தசங்கரி எம். பி. மேற்கொண்ட முயற்சிகளைத் தொடர்ந்து கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் எதிரொலி— கிளிநொச்சியிலுள்ள இருபத்தொரு பாடசாலைகளுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் அண்மையில் வழங்கப்படவிருக்கின்றன,

மூக்கிலிருந்து விரலை எடுக்கின்றீர்களா?

(தகவல்: கிளிநொச்சி நிருபர்)

— ஊடுருவி

## இலங்கைப் பல்கலைக்கழகங்களின் வெளிநிலை விரிவுரைகள் - 1983/84

பேராதனை, கொழும்பு, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களின் கலை, புள்ளிவிபரவியல், சட்டம், வர்த்தகம் ஆகிய

### பாடநெறிகளுக்கான விரிவுரைகள்

### யாழ். நகரில் 5-2-83ல் ஆரம்பம்

க. பொ. த. உயர் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தி பெற்றவர்கள் விபரங்களையும் விண்ணப்பப் படிவத்தையும் ரூ. 5/- செலுத்தி நேரிலோ / தபால் மூலமோ பெறலாம்.

ஏற்கனவே விண்ணப்பித்த மாணவர்களுக்கு

**அனுமதி அட்டைகள்**

தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

புதிய மாணவர்களுக்கான வரவேற்பு'விழா 5-2-83 காலை 10 மணிக்கு நடைபெறும்.

THE COLLEGE OF DEGREE STUDIES

உதவிப்பதிவாளர்,
பட்டப்படிப்புகள் கல்லூரி,
173/9, ஸ்ரான்லிவீதி,
[வெலிங்டன் கலரிக்கேற் முன்பாக]
யாழ்ப்பாணம்.

## இன்று

(யாழ்ப்பாணம்)

சுவாமி பிரேமானந்தா இன்று சுன்னாகம் பூபால கிருஷ்ண ஆச்சிரமத்தில் நடைபெறும் பஜனையில் கலந்துகொண்டு ஆசியுரை வழங்குவார். (த)

## ராஜீவ்.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்திரா காங்கிரஸின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

1975-ஆண்டு முதல் 1977-ம் ஆண்டுவரை சர்ச்சைக்குரியராக விளங்கிய இந்திரா காந்தியின் இளைய புதல்வர் திரு. சஞ்சே காந்தியே அரசியல் வாரிசாகக் கருதப்பட்டு வந்தார். அவர் விமான விபத்து ஒன்றில் பலியானதைத்தொடர்ந்து திரு. ராஜீவ் காந்தி அரசியலில் பிரவேசித்தார். (க)

## விலைப்பட்டியல் வழக்கு:

# யாழ். நீதிமன்றத்தில் வர்த்தகர் ஆஜர்!

(யாழ்ப்பாணம்)

விலைப்பட்டியலை பாவனையாளருக்குத் தெரியப்படுத்தாமல் வியாபாரம் செய்ததாகக் குற்றம்சாட்டி தொடரப்பட்ட வழக்கில், இரு பிரபல வர்த்தகர்களுக்கு யாழ் நீதவான் வி. ஜெகஜோதி முடிக்குரிய செலவாக தலா 500 ரூபா செலுமாறு தீர்ப்பளித்தார்.

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள இரு பிரபல வர்த்தகர்களுக்கே இவ்வாறு விதிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட உள்நாட்டு வியாபாரப் பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் இவ் வழக்கைத் தாக்கல் செய்திருந்தனர்.

வர்த்தகர் ஒருவர் நீதிமன்றத்தில் ஆஜராகாததைத் தொடர்ந்து நீதிமன்றம் கலையும் முன் அவரைக் கைது செய்து கொண்டு வருமாறு பொலிசாருக்கு நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

அவ்வர்த்தகரைத் தேடி பொலிசார் சென்றபோது அவர், வியாபார நிலையத்தின் பின்பக்கமாகத் தப்பியோட முயற்சித்தாராம். பொலிசார் அவரை மடக்கிப் பிடித்து நீதிமன்றத்தில் ஆஜர்செய்தனர்.

மூன்று மணித்தியாலங்கள் அவரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்ட நீதிவான் முடிக்குரிய செலவாக 500ரூபா செலுத்தும்படி தெரிவித்தார். [மா]

## விசேட அறிவித்தல்

தவிர்க்க முடியாத காரணங்களினால் எம்மால் 4-2-83ல் நடத்தப்படவிருந்த Computer Programming Courseக்கான உளச்சார்புப் பரீட்சையும் Radio and Electronic Engineering Courseக்கான புலமைப் பரீட்சையும் அன்றைய தினம் நடைபெறுதெனவும்,

அப்பரீட்சைகள் 11-2-83 வெள்ளிக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளனவெனவும் இத்தால் அறியத்தருகிறோம்.

1. Computer Programming Course க்கான உளச் சார்புப் பரீட்சை 9 To 10-30 a. m.
2. Radio and Electronic Engineering Courseக்கான புலமைப் பரீட்சை 11-30 To 12-30

| | |
|---|---|
| **கன்ரேபியா கல்வி நிலையம்,** | **Cantabia Institute,** |
| 21, பிரதான வீதி, | 21, Main Street, |
| யாழ்ப்பாணம். | Jaffna. |

T'phone: 24201

## ஹர்த்தால்....

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்ஈழ விடுதலை அணிப் பிரசாரச்செயலாளர் திரு. கோவை மகேசன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் மற்றும் தொகுதிகளிலும் விடுதலை அணித் தொண்டர்கள் வர்த்தக நிலயங்களுக்குச் சென்று 2 தினங்களும் ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு வேண்டுகோள் விடுத்ததாகவும் அவர் தெரிவித்தார். [க]

## யாழ். பல்கலைக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் உண்ணாவிரதத்தை நிறுத்தியதும் அடுத்த பிரிவாக நியமிக்கப்பட்ட 50 மாணவ, மாணவிகள் நான்கு நாட்களுக்கு உண்ணாவிரதம் இருக்கத் தொடங்குவர்.

நாளை யாழ். பல்கலைக்கழக மாணவ, மாணவிகள், யாழ். கல்விக்கழக ஊழியர் சங்கத்தினர், மற்றும் பொதுமக்கள் உண்ணாவிரதத்தில் பங்குபற்றுவார்கள் என்று யாழ். பல்கலைக்கழக மாணவர் அவைத் தலைவர் திரு. ஸ்ரீஸ்கந்தராசா தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

### செல்வி இவஞ்ஜலீன் கிருபை மதியாபரணம்

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி முன்னாள் அதிபர் செல்வி இவஞ்ஜலீன் கிருபை மதியாபரணம் காலமானார். இவர், செல்விகள் கண்மலர், அரியநேசம், திருமதி ரேஸ் பார்மர், காலஞ்சென்ற திருமதி இராணி குட்டித்தம்பி ஆகியோரின் சகோதரியும், எலிசபெத் லுடுவிசி அம்மாளின் நண்பியும் ஆவர். நல்லடக்க ஆராதனை இன்று (3-2-83) வியாழக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு நடைபெறும்.

6081

## தமிழ்க் காங்கிரஸ் பங்குபற்றும்

யாழ். பல்கலைக்கழக மாணவரின் உண்ணாவிரதப்போராட்டத்திற்குத் தமிழ்க் காங்கிரஸ் ஆதரவு வழங்கியுள்ளது.

தமிழ்க் காங்கிரஸ் இன்றும், நாளையும் உண்ணாவிரதத்தில் பங்குபற்றும் என்று தமிழ்க் காங்கிரஸ் துணைச் செயலாளர் திரு. ரி. மகேந்திரராஜா மாணவர்களுக்கு அறிவித்துள்ளார். (மா)

# ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்

## புதிய உல்லாச பஸ்சேவை

தினசரி மாலை 8-30 மணி கொழும்பில் இருந்து----யாழ்ப்பாணத்துக்கு
தினசரி மாலை 7-45 மணி யாழ்ப்பாணத்தில் இருந்து-----கொழும்புக்கு
கண்ணியமான பாதுகாப்பான 'பஸ்சேவை

**யாழ்ப்பாணத்தில் டிக்கற் பெறுமிடங்கள்:-**

(1) ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 24310

(2) யாழ். ஐக்கிய வியாபார சங்கம்
இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 22370—22438—22537

(3) யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23596

(4) குயிக் ட்ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்
சரஸ்வதி கார்டின்ஸ், சேர்ச் லேன், சாவகச்சேரி.
தொலை பேசி இல; 22273. சாவகச்சேரி

**கொழும்பில் டிக்கற் பெறுமிடங்கள்:**

(1) ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
இல: 463, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190

(2) ரவீந்திரா ஸ்டோர்ஸ்
இல: 285, காலி வீதி, வெள்ளவத்தை.

(3) லங்கா பம்பே சுவீட் ஹவுஸ்,
இல.105,ஓல்கொட் மாவத்தை,புறக்கோட்டை.
தொலைபேசி இல; 22830

(4) நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
இல; 127, காலி வீதி. பம்பலப்பிட்டி.
தொலைபேசி இல:88866

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] அச்சகத்தில் 1983-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.D. 100236/81 Eelanaadu - P. O. Box: 49, Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126